# சுபீட்சம்

SUPEEDSAM

EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 27.12.2021 supeedsam.com supeedsam@gmail.com







# இந்த நாட்டில் நிதியும் இல்லை நீதியும் இல்லை



(மட்டுநிருபர்)

இந்த நாட்டில் நிதியும் இல்லை, நீதியும் இல்லாத சூழ்நிலையே இன்று உள்ளது. இந்த நாட்டில் நீதியமைச்சர் இராஜினாமா செய்யும் நிலையில் இந்த நாடு உள்ளது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அமரர் ஜோசப்பரராஜசிங்கத்தின் 16வது நினைவு தினம் மட்டக்களப்பில் இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட நிகழ்வில் மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

## திருக்கோவிலிலிருந்து மொனராகலை செல்லும் வரை சுட்ட பொலிசை யாரும் கைது செய்யவில்லை!

## மனநோயுள்ளவர்களை தமிழர் பிரதேச பாதுகாப்பிற்கு அனுப்புகிறதா இந்த அரசாங்கம்?

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவிலில் வெறியாட்டம் ஆடிய பொலிஸ் உத்தியோகத்தர் அங்கிருந்து தப்பி தனது சொந்த வாகனத்தில் பல சோதனைச்சாவடிகளையும் தாண்டி துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் 3மணிநேரம் பயணித்து மொனராகலை சென்று வீட்டுக்குச்சென்று பின்னர் சரணடையும்வரை யாரும் அவரை கைது செய்யவில்லை. இது தானா தேசிய பாதுகாப்பின் லட்சணம்?

இவ்வாறு திருக்கோவில் பொலிஸ் நிலையத்தாக்குதலில் உயிரிழந்த பாண்டிருப்பைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் அழகரெத்தினம் நவீனன்(வயது30) அவர்களின் வீட்டுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த த.தே.கூசுட்டமைப்பின் மட்டு.மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...






மட்டக்களப்பில் சனிக்கிழமை நடைபெற்ற படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பர ராச்சிங்கத்தின் 16வது நினைவு தினத்தின் போது

## தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டு ஆவணம் 29 ஆம் திகதி கைச்சாத்திட நடவடிக்கை

(ராஜ்)

ரெலோவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்புவதற்கான தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டு ஆவணம் இறுதிக்கட்டத்தினை எட்டியுள்ள நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை குறித்த ஆவணத்தில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கைச்சாத்திடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த கூட்டு கடிதச் செயற்பாட்டின் ஒருங்கிணைப்பாளரான

02 ஆம் பக்கத்தில்...

## ஒத்த நிலைப்பாட்டை உடையவர்களை உள்ளீர்ப்பதில் எமக்கு பிரச்சினை இல்லை



(ராஜ்)

13 ஆவது திருத்த சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தல் உட்பட தமிழ் பேசும் மக்களுக்கு காணப்படும் முக்கிய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்பதை அடியொற்றி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைப்பதற்காக தயாரிக்கப்படும் கூட்டு ஆவணச் செயற்பாட்டில் ஒத்த நிலைப்பாட்டை

02 ஆம் பக்கத்தில்...

## திருக்கோயில் போலிஸ் நிலையத்தில் பலியான அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கல்முனை நிருபர்)

அம்பாறை திருக்கோவில் காவல் நிலையத்தில் காவல்துறை சார்ஜன்ட் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி கொல்லப்பட்ட 4 காவல்துறை அதிகாரிகளும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த ஒலுவிலைச் சேர்ந்த கே.எல்.எம். அப்துல் காதர், பாண்டிருப்பைச் சேர்ந்த அழகரெத்தினம் நவீனன், பிபிலையைச் சேர்ந்த டி.பி.கே.பி. குணசேகர, சியம்பலாண்டுவவைச் சேர்ந்த டி.எம்.டி.எச். புஷ்பகுமார ஆகிய 4 காவல்துறையினருக்குமே இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கே.எல்.எம். அப்துல் காதர் சார்ஜன்ட் நிலையிலிருந்து உப காவல் பரிசோதகர் ஆகவும் அழகரெத்தினம் நவீனன் கான்ஸ்டபிள் நிலையிலிருந்து சார்ஜன்ட் ஆகவும் டி.பி.கே.பி. குணசேகர கான்ஸ்டபிள் நிலையிலிருந்து சார்ஜன்ட் ஆகவும் டி.எம்.ரி.எச். புஷ்பகுமார

02 ஆம் பக்கத்தில்...

## மண் மாபியாக்களின் கூடாரமாக மட்டக்களப்பு மாறிவிட இடமளிக்கக்கூடாது

### இராஜங்க அமைச்சர் வியாழேந்திரன்

( ரக்ஸனா)

நாளுக்குநாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கைகளில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மாபியாக்கள் குவிந்து வருகின்றனர் . இவ்வாறு எமது மண் வளத்தை சூறையாடுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது மட்டக்களப்பு மாவட்டம் மண் மாபியாக்களின் கூடாரமாக மாறிவிட இடமளிக்கக்கூடாது. சட்டவிரோதமாக மணல்

02 ஆம் பக்கத்தில்...



## பஸ் கட்டணங்களும் அதிகரிக்கிறது

(காந்தன்)

எதிர்வரும் புதன்கிழமை (29) முதல் பஸ் கட்டணத்தை சிறிதளவு அதிகரிக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

திருத்தங்களுக்கு உட்பட்ட வகையில் இந்த பஸ் கட்டணங்கள் அமையுமென அவர் அறிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






## நாட்டை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும்

'நெருக்கடி நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமென்றால் அடுத்த சில ஆண்டுகளுக்கு நாட்டை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும் என்று 'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி

02 ஆம் பக்கத்தில்...



## ஆழிப்பேரலையின் 17 ஆவது ஆண்டு

### நாடெங்கும் உணர்வுபூர்மாக அனுஷ்டிப்பு



(காந்தன்)

2,30,000 க்கும் அதிகமான மக்களைக் கொன்ற 2004 சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று 17 வருடங்கள் பூர்த்தியான நிலையில்,நேற்று நாடு முழுவதும் உணர்வுபூர்மாக அனுஷ்ட்டிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி 9.1 ரிச்டெர் அளவில் ஆழ்கடலில் ஏற்பட்ட நில

02 ஆம் பக்கத்தில்...







## மண் மாபியாக்களின் கூடாரமாக மட்டக்களப்பு மாறிவிட இடமளிக்கக்கூடாது

அகழ்வு நடவடிக்கையை தடுத்து நிறுத்தாவிட்டால் எமது மாவட்டத்தின் பல பிரதேசங்கள் அத்திப்பட்டி போல் அழிந்து போகும் நிலை காணப்படுகின்றது என இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டக்களப்பு மாவட்டம் பங்குடாவெளி தளவாய் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை(26) நீர் விநியோகத் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இராஜங்க அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரம் மற்றும் உரிமைகள் சார்ந்து பல பிரச்சினைகள் காணப்படுகின்றது அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாங்கள் அரசாங்கத்திடமிருந்து பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கு அமைவாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்களின் காலடிக்கு கொண்டு சேர்த்து கொண்டிருக்கின்றோம். அதில் பின்தங்கிய கிராமப் புறங்களில் உள்ள அனைத்து வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மின்சாரம் இல்லாத கிராமங்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலை திட்டமும் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் குடிநீரைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் படுவான்கரை பிரதேசங்களைச் சார்ந்த கிராம பிரதேசங்களுக்கு சுத்தமான குடிநீர் இல்லாமை பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது இதற்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்காக நீர்ப்பாசன செழுமை வேலை திட்டத்தின் கீழ் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன இதில் தளவாய் மற்றும் இலுப்பை சேனை பெரிய புல்லுமலை மற்றும் மரப்பாலம், ராஜபுரம் ஆகிய பிரதேசங்களில் குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன இதனூடாக முயற்சியாளர்கள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒருபுறம் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மறுபுறம் வெளி மாவட்டங்களை சேர்ந்த மண் மாபியாக்களினால் எமது மண் வளம் அளிக்கப்பட்டு வருகின்றது ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதுளை வீதியை சேர்ந்த பல கிராமப்பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு பல அரசியல் பின்னணிகளை கொண்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு மணல் அகழ்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருப்பது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவே அன்றி வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மண் மாபியாக்களின் ஆக்கிரமிப்புக்கு அல்ல இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் வளம் வெளி மாவட்டங்களை சேர்ந்த மண் மாபியாக்களின் கூடாரமாக மாறிவிட்டது.

இவ்வாறு சட்டவிரோத மண் அகழ்விற்கு இடம் கொடுப்போம் ஆனால் இன்னும் 20 வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல கிராமங்கள் அழியும் நிலை உருவாகும். தொடர்ந்து எம்மால் இம்மாவட்டத்தின் மண் வளம் சூரையாடுவதற்கு இடம் கொடுக்க முடியாது சட்டவிரோத மணல் அகழ்வுகளை தடுத்து நிறுத்த அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டு வருகின்றோம். எமது பிறந்த மண் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட்டு வருகின்றோம் அரசியல் நோக்கங்களை தவிர்த்து மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளுக்கு குரல் கொடுங்கள் என ராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கருத்து தெரிவித்திருந்தார்.

## ஆழிப்பேரலையின் 17 ஆவது ஆண்டு நாடெங்கும் உணர்வுபூர்மாக

அதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் பேரழிவை ஏற்படுத்திய இந்த சுனாமியின் சீற்றத்தால் பல நாடுகளை சேர்ந்த 2,30,000 மக்கள் செத்து மடிந்தனர்.

இந்நிலையில்,சுனாமி பேரழிவின் 17 ஆவது ஆண்டினை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் உணர்வுபூர்வமாக நினைவு தினம் அனுஷ்ட்டிக்கப்பட்டது.

அதற்கமைய யாழ்.மாவட்டத்தில் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட வடமராட்சி கிழக்கில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. பிரதான நிகழ்வு உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நினைவேந்தல் குழுவின் தலைவர் வே.தவராசா தலைமையில் இடம்பெற்றது.

இதேபோல் உடுத்துறை பத்தாம் வட்டாரத்தில் சுமார் 50 உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மணற்காட்டுப் பகுதியில் 72 உடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட சவக்காலப் பிட்டியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முன்னதாக மணற்காடு புனித அந்தோணியார் ஆலயத்தில் பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்தைத் தொடர்ந்து சுனாமி நினைவாலயத்தில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேபோல் வடமராட்சி, புலோலி சூசையப்பர் ஆலயத்தில் உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதேபோன்று தாளையடி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களது உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அதேபோல், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவிட் சுகாதார நடைமுறைகளைப் பேணி இன்று சுனாமியினால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இம் மாவட்டத்தில் சுமார் 1800 பேரை பலிகொண்ட நாவலடி, டச்பார், புதுமுத்துவாரம், திருச்செந்தூர் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிகளில் மெழுகுதிரி ஏற்றி சமய வழிபாடுகள் இடம்பெற்ற அதேவேளை, உறவுகளை இழந்தவர்கள் கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் ஒந்தாச்சிமடம் கிராமத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் உயிரிழந்தவர்களுக்கு சுடர் ஏற்றி, மலர்தூபி உறவினர்கள் அஞ்சலி தெலுத்தினர்.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைத் தவிசாளர் ஞா.யோகநாதன், பிரதேச சபை உறுப்பினர் சற்குணம், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

அதேபோல், புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தில் நினைவிற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆழுகையின் கீழ் உள்ள சுனாமி நினைவாலயத்தில் வணக்க நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. காலை 8.00மணிக்கு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் போது புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் வெளியீடு செய்யப்பட்ட அலை தந்த சோகம் பாடல் இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதேபோல்,யாழ். பல்கலைக்கழகத்திலும் நினைவுதினம் அனுஷ்ட்டிக்கப்பட்டது.பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலை வளாகத்தில் ஆத்மாத்த ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டது.

## திருக்கோவிலிலிருந்து மொனராகலை செல்லும் வரை சுட்ட பொலிசை

பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் கேள்வியெழுப்பினார்.

மரணவீட்டுக்கு சென்ற சாணக்கியன் எம். மற்றும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோர் இறந்த பொலிஸ் உத்தியோகத்தர் நவீனனின் தாயாரைச்சந்தித்து ஆறுதல் கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துரைக்கையில்:

அந்தச்சம்பவத்தில் உயிர்நீத்த 4பொலிசாரின் குடும்பத்திற்கும் அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன். அதேவேளை அந்த வெறியாட்டம் ஆடிய பொலிஸ்காரர் இவ்வாறு நடந்துகொண்டதற்கு காரணம் கேட்டால் லீவு தராமையினால் விரக்தி என்கிறார்கள். இன்னுமொருகதை அவருக்கு மனநிலை சரியில்லையாம்.

அப்படியெனின் மனநிலை சரியில்லாதவர்களையா தமிழர் பிரதேச சட்டம் ஒழுங்கு பாதுகாப்பிற்காக அனுப்புகிறீர்கள்.? வடக்கு கிழக்கில் இப்படியான சம்பவங்கள் நடந்து கொண்டுதான்வருகின்றன. வவுணதீவில் பொலிசார் கொலையும் அப்படியே.

தமிழர் பிரதேசத்தில் இப்படியான சம்பவங்கள் நடந்தால் உடனே மனநிலை சரியில்லை எனக்கூறி கதையடிமுடிப்பது வழக்கமாகிவிட்டது.

உரிமை நீதிக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் எமது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நவீனனின் மரணத்திற்கும் நீதி வேண்டிநிற்கிறது?. இதற்கு நீதியான விசாரணை நடாத்தி அக்குடும்பத்திற்கு நியாயம் வழங்கவேண்டும்.என்றார்.

காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கே.ஜெயசிறில் கருத்துரைக்கையில்:

நவீனின் இழப்பு பாண்டிருப்பை மட்டுமல்ல முழு கிழக்கு மாகாணத்தையும் அதிரவைத்துள்ளது. அரசதொழிலைப்பெற்று நன்றாக வாழலாம் என்ற சிந்தனையிலுள்ள இளைஞர்களின் மத்தியில் இக்கோரத்தாண்டவம் பேரிடியைத் தந்துள்ளது.

ரஜீவ் காந்திக்கு அடித்த படைவீரருக்கு மனநோய். சக பொலிசாரை சுட்டவருக்கும் மனநோய். இதே தாக்குதலை ஒரு தமிழர் செய்திருந்தால் வேறுபெயரைச்சொல்லி கூட்டிற்குள் வை;த்திருப்பார்கள். அரசாங்கம் இளைஞர்களின் பயத்தை போக்கி சுதந்திரமாக வாழவகைசெய்யவேண்டும்.

பொலிஸ்உத்தியோகத்தர் நவீனனின் இழப்பையிட்டு கவலையடையும் அதேவேளை குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை காரைதீவுமண் சார்பாக தெரிவிக்கிறேன். தமிழர் தாயகத்தில் பொலிசாரின் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும்போது விரக்தியையும் மனநிலையையும் காரணம் சொல்வதொன்றும் புதிதல்ல. என்றார்.




## திருக்கோவில் பிரதேசத்தில் ஆழிப்பேரலையின் 17 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு)



திருக்கோவில் பிரதேசத்தில் ஆழிப்பேரலையின் 17வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது திருக்கோவில் சுப்பர்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஜே.சிவகுமார் தலைமையில் விளையாட்டுத் திடலில் உயர் நீத்த உறவுகளுக்கு தீபச் சுடர் ஏற்றி வழிபாட்டுகள் இடம்பெற்று இருந்தன.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் திருக்கோவில் பிரதேசசபையின்தவிசாளர் இ.வி.கமலராஜன் தென்கிழக்குப் பல்கலைக் கழக முகாமைத்தவப் பீட பேராசிரியர் எஸ்.கணபாலன் மற்றும் மதகுரு பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பொது மக்கள்கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

## பஸ் கட்டணங்களும் அதிகரிக்கிறது

பஸ்கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ளாவிடின் நாடளாவிய ரீதியில் பணிநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும்

செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல இராணுவ ஆட்சி எனக் கூவிக்கொண்டு ஜனநாயக கதைகளைக் கூறி வருவோரைச் சிறையில் அடைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாரஇதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

‘இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களாலும் ஆட்சியை நடத்த முடியும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்ரி உடனடியாக நீக்கப்பட வேண்டும்’ எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஒத்த நிலைப்பாட்டை உடையவர்களை

உடையவர்களை உள்ளீர்ப்பதில் எமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மேற்படி கூட்டு ஆவணத்தயாரிப்பில் தமக்கு அழைப்பு விடுத்தால் தாமும் பங்கேற்பதற்கு தயார் என்று அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உள்ள அரசியல் கட்சிகளில் எம்முடைய நோக்குடன் ஒத்த நிலைப்பாட்டை கொண்டிருக்கும் தரப்புக்களை இணைத்துக்கொள்வதில் எமக்கு எவ்விதமான பிரச்சினைகளும் கிடையாது.

குறிப்பாக, அரசில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் உள்வாங்கப்படுவதில் எமக்கு பிரச்சினைகள் இல்லை. அரசில் உள்ள கட்சிகள் எமது பொது நிலைப்பாடுகளுக்கு உடன்பாடு தெரிவித்தால் அவர்களையும் இப்போதே உள்வாங்குவதற்கு கூட நாம் தடையாக இருக்கப்போவதில்லை.

உண்மையில் அவர்களை உள்வாங்குவது இணைத்துச் செயற்படுவது அனைத்தும ஏற்பாட்டாளர்களது பணியாகும். நாம் அதுபற்றி பற்றி அலட்டிக்கொள்ளவே இல்லை என்று அவர் தெரிவித்தார்.

## திருக்கோயில் பொலிஸ் நிலையத்தில் பலியான

கான்ஸ்டபிள் சாரதி நிலையிலிருந்து சார்ஜன்ட் சாரதி ஆகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த திருக்கோவில் காவல் நிலையப் பொறுப்பதிகாரி தெஹிகம உட்பட இரு காவல்துறையினர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்தில் கைதான சார்ஜன்டிற்கு ஜனவரி 06ஆம் திகதி வரை விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த 4 காவல்துறைஅதிகாரிகளினதும் வீடுகளுக்கு காவல்துறை மாஅதிபர் சி.டி.விக்ரமரத்ன விஜயம் செய்ததோடு, அவர்களது குடும்பத்தினருக்கு இலங்கை காவல் திணைக்களம் சார்பில் தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

## தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டு ஆவணம்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் குருசுவாமி சுரேந்திரன் வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பில், இந்திய பிரதமருக்கு அனுப்புவதற்காக தமிழ் பேசும் மக்களின் கட்சித் தலைவர்களினால் ஆவண உள்ளடக்கங்கள் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில்,எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் தலைவர்கள் கைச்சாத்திட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

## இந்த நாட்டில் நிதியும் இல்லை நீதியும் இல்லை

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்

பொன்.செல்வராஜா,தமிழரசுக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான, கட்சி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த இரா.சாணக்கியன்,

மாமனிதர் அமரர் ஜோசப்பரராஜசிங்கத்தின் படுகொலைக்குக் காரணமாக அமைந்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். இந்த நாட்டில் நிதியும் இல்லை, நீதியும் இல்லாத சூழ்நிலையே இன்று உள்ளது. இந்த நாட்டில் நீதியமைச்சர் இராஜினாமா செய்யும் நிலையில் இந்தநாடு உள்ளது.

அவ்வாறான நிலையில் மாமனிதர் அமரர் ஜோசப்பரராஜ சிங்கத்திற்கு இந்த அரசாங்கம் நீதியைத்தரும் என்று எதிர்பார்க்கமுடியாது. இவ்வாறான நிலையில் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பெண்களுக்கு நடந்த அநீதிகள் தொடர்பாக ஊடகங்களில் பேசியிருந்தார்.

இன்று அவரெல்லாம் தூயவராக வந்து மட்டக்களப்பில் பெண்களுக்கு எதிரான அநீதிகள் பற்றிப் பேசுவது என்பது கவலையான விடயமாகும். இவ்வளவு நீதி கோரும் அவர் ஏன் அன்று ஜோசப்பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டபோது நீதி கோரவில்லை.

அவருக்கு அந்த குற்றச்சாட்டு இருந்தது, ஆனால் நீதிமன்றம் ஊடாக ஏதோவொரு வகையில் வெளிவந்து விட்டார். அவர் அந்த கொலையினை செய்யவில்லையென்றால் ஏன் அந்த கொலைக்கு எதிரான நீதி கோரமுடியாது. ஜோசப்பரராஜசிங்கம் ஐயாவினை நினைவு கூரும் இந்த வேளையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஒரு பட்டியலே நீதி கோரப்படாத நிலையில் உள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினைப் பொறுத்தவரை சிங்களவராகவிருக்கலாம், முஸ்லிம்களாக இருக்கலாம், தமிழர்களாக இருக்கலாம் எந்த இடத்தில் எவருக்கு அநீதி நடந்தாலும் அவர்களுக்கு நீதி கோரவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவிருக்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு மட்டும் ஒரு அரசியல் தீர்வு கிடைக்கும் என்று நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது. அதனை நாங்கள் அனைவரும் உணரவேண்டும். எம்மவர்களே முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் போராடவேண்டும் என்று கூறுவார்கள். இன்னுமொரு சமூகம் எவ்வாறு எமக்கு அநீதிகள் செய்ததோ நாங்களும் இன்னுமொரு சமூகத்திற்கு எதிராக அநீதி செய்யக்கூடாது.

அதுவே எனது நிலைப்பாடாகும். தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடும் அதுவாகத்தான் இருக்கும். தமிழ்முஸ்லிம் இரு சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வே தேவையெனக் கட்சி யாப்பிலும் உள்ளது. பிள்ளையான்,வியாழேந்திரன் போன்றவர்கள் செய்கின்றார்கள் என்பதற்காக நாங்கள் அந்த அரசியலைச் செய்யமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# திருக்கோவில் தாக்குதலில் மரணித்த பாண்டிருப்பு பொலிசாரின் வீட்டுக்கு பொலிஸ் மா அதிபர் விஜயம்

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

பொலிஸ் மா அதிபா, சி.பி.விக்ரமரத்ன திருக்கோவில் பொலிஸ் நிலையத்தாக்குதலில் உயிரிழந்த பாண்டிருப்பைச்சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் அழகரெத்தினம் நவீனன்(வயது30) அவர்களின் வீட்டுக்கு நேற்று(26)ஞாயிற்றுக்கிழமை 12.30மணியளவில் விஜயம் செய்தார்.

மரணவீட்டுக்கு சென்ற அவர் இறந்த பொலிஸ் உத்தியோகத்தர் நவீனனின் தாயாரைச்சந்தித்து ஆறுதல் கூறினார். இந்த துர்ப்பாக்கிய சம்பவத்தையிட்டு கவலையடைவதாகவும், பொலிஸ் திணைக்களத்தின் உதவிகள் அனைத்தும் வழங்கப்படும் என்று கூறி





அவருக்கு அடுத்தகட்ட பதவியுயர்வுக்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகக்கூறினார். நவீனனின் குடும்பத்திற்கு பொலிஸ் திணைக்களம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகக்கூறினார். பொலிஸ் மாஅதிபரின் வருகையை யொட்டி காரைதீவு தொடக்கம் கல்முனை பாண்டிருப்பு வரை பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.விசேட அதிரடிப் படையினரும் நின்றிருந்தனர்.

அவர் அங்கு விஜயம் செய்தபோது மரணித்த பொலிசின் பிரேதம் வீட்டுக்கு வந்துசேவில்லை. அம்பாறை வைத்தியசாலையில் பிரேதபரிசோதனை மற்றும் விசாரணைக்காக வைக்கப்படடிருந்தது.

# திருக்கோவில் சம்பவம்; துப்பாக்கி சூடு நடத்தியவருக்கு விளக்க மறியல்

(பாறுக் ஷிஹான்)



திருக்கோவில் பொலிஸ் நிலைய துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்ட சந்தேக நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 06ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் சந்தேக நபரை சனிக்கிழமை(25) மாலை ஆஜர் செய்யப்பட்டபோது அவர் இந்த உத்தரவை வழங்கினார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சார்ஜன்ட் குமார என்பவர் தனது வாகனத்தில் தப்பித்து மொனராகல - எத்திமல பிரதேச பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார். இந்த நிலையில் அவரை பொலிஸார் கைது செய்து அம்பாறை மாவட்டத்துக்கு அழைத்து வந்திருந்த நிலையில் அக்கரைப்பற்று நீதவான் முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் சந்தேக நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 06ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டார்.

# 13 தங்கப்பதக்கங்களை சுவீகரித்த சாதனை மாணவியை வாழ்த்திய அரசியல் பிரமுகர்கள்



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 13தங்கப்பதக்கங்களை சுவீகரித்து சிறந்தமருத்துவபீட மாணவியாக(First class Topper) தெரிவு செய்யப்பட்ட கிழக்குமாகாணத்தின் முதல் சாதனை மாணவி தணிகாசலம் தர்ஷிகாவை, த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இ.சாணக்கியன்ட் த. கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கே.ஜெயசிறில் ஆகியோர் அக்கரைப்பற்று வீடுதேடிச் சென்று வாழ்த்தினர் .

நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணியளவில் வீட்டுக்குச் சென்ற இவர்கள் மாணவியை பாராட்டியதோடு பொன்னாடை போர்த்தி மாலைசூடி மனமார வாழ்த்தினர். குடும்பத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்தனர்.

இக்குழுவினருடன் இலங்கை தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி துணைச்செயலாளர் அ.நிதான்சன் அமைப்பாளர் ரி.பிரதீபன் கல்வியியலாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட



பலர் கலந்துகொண்டு மாணவியை வாழ்த்தினர். அக்கரைப்பற்றை சேர்ந்த தணிகாசலம் தர்ஷிகா என்ற கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த தமிழ் மாணவி கொழும்பு பல்கலைக் கழகத்தின்MBBS இறுதி பரீட்சையில் முதல் தரத்தில் தேர்ச்சி பெற்று 13 தங்கப்பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்படும் 37 தங்கப் பதக்கங்களில் சிறந்த மருத்துவ பீட மாணவ விருது உள்ளடங்களாக 13 தங்கப்பதக்கங்களை இவர் கைப்பற்றியுள்ளார். கடந்த MBBS இறுதி பரீட்சையில் முதல் தரத்தில் தேர்ச்சி பெற்ற ( First Class ) ஓய்வு நிலை அதிபர் தணிகாசலம் அவர்களின் புதல்வி தர்சிக்கா அவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டமளிப்பு விழாவின்போது சிறந்த மருத்துவ பீட மாணவ விருது உட்பட 13 தங்கப்பதக்கங்கள் கிடைக்கப்பெற்றது.

அத்தோடு குறித்த BatchCன் முதல் நிலை (Topper) ஆகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலை லெஜன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுகம்




(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை லெஜன்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் சீருடை உத்தியோக பூர்வமாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது .

திருகோணமலையில் 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்களைக் கொண்ட லெஜன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உத்தியோகபூர்வ சீருடை நேற்று (26) திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கழகத்தின் உத்தியோகபூர்வ சீருடை செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் அனுசரணையுடன் உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன்.

செலிங்கோ லைஃப் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளர் ரங்கநாதன் அவர்களின் அனுசரணையில் திருகோணமலை மாவட்ட செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் முகாமையாளர் அலெக்ஸ் அவர்களினால் லெஜன்ட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் சக்தி பவன் அவர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த லெஜன்ட் விளையாட்டுக் கழகத்தின் உருப்பினர்கள்.

மிக நீண்ட காலமாக திருகோணமலையில்துடுப்பாட்ட மைதானம் இன்மையால் குறித்த விளையாட்டுத்துறையானது பாரிய பின்னடைவை சந்தித்துள்ளதுடன் அண்மையில் நடைபெற்ற லங்கா பிரிமியர் லீக் விளையாட்டுப் போட்டிகளில் கூட திருகோணமலையின் வீரர்கள் பங்கேற்காததை இட்டு தாம் மிகுந்த வருத்தமடைவதாக தெரிவித்தனர்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரையில் கடினப்பந்து துடுப்பாட்ட போட்டிகளுக்கான பயிற்றுவிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மட்டின் என்று சொல்லப்படும் மைதான விரிப்பின் மேலாக பயிற்சி செய்வதன் காரணமாக கொழும்பு உள்ளிட்ட தரமான மைதானங்களில் விளையாடுவதற்கு திருகோணமலை வீரர்கள் சிரமப்படுவதாகவும் அவர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

மேலும் 40 வயதுக்கு மேற்பட்ட முன்னைய கழக விளையாட்டு வீரர்களைக்கொண்டு குறித்த களகமானது உருவக்கப்பட்டதாகவும் இதன் மூலமாக உடற்பயிற்சி, மற்றும் மன வலிமையை குறித்த வயதுக்கு மேற்பட்டவர்களுக்கிடையே விருத்தி செய்யும் நோக்குடன் குறித்த கழகமானது ஆரம்பிக்கப் பட்டுள்ளது என தெரிவித்த அவர்கள் அதன் மூலமாக இளைஞ்ஞர்களுக்கிடையே ஆளுமையை விருத்தி செய்யவும் இச்செயற்பாடானது வளிவகுக்கும் என தாம் நம்புவதாக அவர்கள் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் வேறு மாவட்டங்களில் உள்ள 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்களுடைய களகங்களுடன் போட்டியிட தாம் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

குறித்த நிகழ்வில் கழகத்தின் தலைவர் சக்தி பவன், செயலாளர் அர்.ஜெரோம், அணியின் தலைவர் லக்ஸ்மன், அணியின் உபதலைவர் இளவழகன் மற்றும் செலிங்கோ லைஃ நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் அலெக்ஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# தெய்வீக கிராம நிகழ்வில் பாபு சர்மா குருக்கள் கலந்து கொண்டார்

(ந.குகதர்சன் )

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொலநறுவை மாவட்டத்தின் வெலிக்கந்தை பிரதேச செயலகம் நடாத்திய தெய்வீக கிராம நிகழ்வு தீவுச்சேனை முத்துவிநாயகர் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

வெலிக்கந்தை பிரதேச செயலக இந்துசமய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.சுந்தர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமரும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஸவின் இந்துமத விபகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் அதிதிகளாக சர்வதேச குருபீடம் ஸ்ரீ வித்தியாகுருகுலம் அமைப்பாளர் சிவஸ்ரீ ஆர்.தர்சக சர்மா, பொலநறுவை மாவட்ட இந்துசமய கலாசார உத்தியோகத்தர் ஆர்.செவ்விதன், பொலநறுவை மாவட்ட இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ எஸ்.தேவராஜா தீவுச்சேனை முத்து



விநாயகர் ஆலய தலைவர் எம்.செல்வகுமார், செயலாளர் எஸ்.சனுஜன், பொருலாளர் எம்.ருபேகாந்தன் பிரதேச ஆலயங்களின் குருமார்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச மக்களாலும் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் அதிதிகள் ஊர்வலமாக விழா நடைபெற்ற முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

இதன் போது தீவுச்சேனை, முத்துக்கல், கறப்பொல, உணாவெ, குடாப்பொக்கன போன்ற கிராமங்களைச்சேர்ந்த அறநெறி பாடசாலை மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றதோடு மாணவர்களுக்கு இந்து கலாசார திணைக்களத்தினால் புத்தகங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதம அதிதி கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவை தீவுச்சேனை முத்துவிநாயகர் ஆலய நிருவாகத்தினாலும் பிரதேச செயலகத்தினாலும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


வெகுவிரைவில்
கோலாகலமாக திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch


Offer From
18.12.2021 to 15.01.2022
(Unsere Öffnungszeiten während der Feiertage finden Sie auf der Rückseite)
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை
IMPORTAS Cash & Carry
Bern & Zürich
Merry Christmas & HAPPY NEW YEAR
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்
Free* ab 300 CHF
CHF 300 க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு CHF 39.90 பெறுமதியான Rice Cooker இலவசம். 18.12.2021 தொடக்கம் 31.12.2021 வரையே
CHF 119.- CHF 60.-
அதிரடி விலையில் V Box கொள்வனவு செய்பவர்களுக்கு 50% விலைக்கழிவு.
Nur solange Vorrat reicht.
Einkaufswert ab 300 Fr. Subash Rice Cooker free.

# வடக்கு, கிழக்கின் மேல் திடீரென சீனாவிற்குக் கரிசனை வரக் காரணம் என்ன?

## தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவர் பிரசன்னா இந்திரகுமார்

(சுமன்)

இலங்கை அரசாங்கத்தின் உற்ற தோழனாய் இருக்கும் சீனா தமிழர்களின் விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்? வடக்கு கிழக்கின் மேல் திடீரென சீனாவிற்குக் கரிசனை வரக் காரணம் என்ன? என தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளருமான பிரசன்னா இந்திரகுமார் கேள்வியெழுப்பியுள்ளார்.

வடக்கு கிழக்கில் சினாவின் பிரவேசம் தொடர்பில் இன்றைய தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் அதிக நம்பிக்கை கொண்ட ஒரு நாடாக இருப்பது இந்தியா. பிராந்திய வல்லரசாகத் திகழும் இந்தியாவின் அனுசரணையுடன் தான் தமிழர்களுக்கான ஒரு தீர்வு கிடைக்கப்பெற முடியும் என்பதும் அரசியலாளர்களின் ஏகோபித்த கருத்துமாகும். அவ்வாறிருக்கையில் நம்மவர்கள் சிலர் சீனாவினை நாட வேண்டும் என்று கதைப்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாகும்.

அகிம்சைரீதியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் உரிமைக்கான போராட்டம், ஆயுத ரீதியில் அதியுச்சம் பெற்று தற்போது ஒரு ஜனநாயக ரீகதியிலான முன்னெடுப்புகடிளை மேற்கொண்டு செல்கின்றது. இத்தகு நேரத்தில் ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் ஒரு நாட்டினையே நாம் அனுசரணையாகக் கொள்ள வேண்டும். சர்வதேச விழுமியங்களை மதித்து செயற்படும் நாடுகளுடனான எமது உறவே எமது மக்களுக்கான நேர்மையான தீர்வுக்கு வழிவகுக்கும். அதை விடுத்து சீனாவிடம் செல்வதென்பது முட்டாள் தனமான செயற்பாடாகவே இருக்கும்.



நாட்டிற்கு கடன் என்ற பெயரில் நிதியினைக் கொடுத்து நாட்டின் வளங்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் சினாவின் ஆதிக்கம் தற்போது வடக்கு கிழக்குப் பிராந்தியங்களிலும் வேறூன்ற ஆரம்பித்துள்ளது. இது தமிழர்களின் உரிமை தொடர்பான செயற்பாடுகளுக்குப் பாதகமாகவே அமையும். இதனை நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் எவருடனும் பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆனால் தீர்வு என்ற ஒன்று பெற வேண்டுமானால் அது இந்தியாவினூடாகவே தான் அமையும். சீனாவுடன் பேச வேண்டும் என்று இந்தியாவின் எதிர்ப்பினைப் பெறுவதென்பது எமது மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிடும். வடக்கு கிழக்கின் மேல் திடீரென சீனாவிற்குக் கரிசனை வரக் காரணம் என்ன?

எமது ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் முறைமையானது தமிழர்களின் அபிலாசைகளுக்கான ஆரம்பப் புள்ளியாக இருக்கின்றது. இது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாக இல்லாவிட்டாலும். இதிலிருந்து அடுத்த அடுத்த கட்டங்களை நோக்கி நாங்கள் முன்நகர வேண்டும். அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மாத்திரமே வழிவகுக்கும்.

இலங்கை அரசாங்கத்தின் உற்ற தோழனாய் இருக்கும் சீனா தமிழர்களின் விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்? எந்த நம்பிக்கையில் சீனாவுடன் தொடர்பினை எற்படுத்த முடியும்? போன்ற நிலைமைகளையெல்லாம் ஆராயாமல் கருத்திடக் கூடாது.

தாகத்தில் இருப்பவனுக்கு தூரத்தில் இருக்கும் கங்கையை விட பக்கத்தில் இருக்கும் குட்டையே மேலானது என்பார்கள். எனவே உரிமையை இழந்து தவிக்கும் மக்களின் உரிமையைப் பெற பக்கத்து தேசத்தை விடுத்து எங்கோ இருக்கும் சீனாவோடு கதைப்பதென்பது வேலிக்குள் இருப்பதை எடுத்து விட்ட கதையாகப் போய்விடும் என்று தெரிவித்தார்.

# ஊருக்குள் புகுந்துள்ள யானைகளை விரட்ட கடும் பிரயத்தனம்

## 500 தென்னை மரத்தில் 10 அளவிலே மிஞ்சியுள்ளது!



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை மற்றும் ஓட்டமாவடி துறை (புட்டி) பகுதிகளில் யானைகள் கூட்டமாக வந்து அட்டகாசம் செய்கின்றது.

என்றுமில்லாதவாறு குறித்த பகுதிகளுக்குள் புகுந்துள்ள யானைகள் மனிதர்கள் நடமாட முடியாதவாறு ஆக்கிரமிப்பு செய்து வருகிறது.

குறித்த பகுதிக்குள் புகுந்துள்ள யானைகள் வீடுகள், மதில்கள், பயிர்கள் போன்றவைகளை சேதப்படுத்தியுள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் தினந்தோறும் அச்சத்துடனே வசித்து வருகின்றனர்.

இவ்வாறு ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வரும் யானைகள் நேற்றிரவு ஓட்டமாவடி துறையில் (புட்டி) அமைந்துள்ள நூர்முகம்மட் இஸ்மாயில் (மம்முசி) என்பவரின் தென்னந்தோப்புக்குச் சென்று மரங்களை அடியோடு சாய்த்துள்ளன.

தான் சுமார் இருபது வருடங்களாக பராமரித்து வந்த தென்னந்தோப்பை யானைகள் வந்து துவம்சம் செய்து விட்டுச் சென்றுள்ளன.

இதனால் எனது வாழ்வாதாரம் இழந்து பாதிப்படைந்துள்ளேன்.

நான் எனது தோட்டத்தில் சுமார் 500 தென்னங்கன்றுகளை வைத்து பராமரித்து வந்தேன். அங்கு யானைகள் தொடர்ச்சியாக வந்து துவம்சம் செய்ததில் 10 இற்கு உட்பட்ட தென்னை மரங்கள் மாத்திரமே மிஞ்சியுள்ளன.

அதேபோன்று எனது தோட்டத்தில் மரமுந்திரிகை, நிழல் தரும் மரங்கள் போன்ற மரங்களை நாட்டி வேலி அமைத்து பராமரித்து வந்தேன். அத்தனை மரங்களையும் யானைகள் துவம்சம் செய்து விட்டன என்று தோட்ட உரிமையாளர் இஸ்மாயில் கவலை தெரிவித்தார்.

இவ்வாறு ஊருக்குள் புகுந்துள்ள யானைகளை காட்டுப் பகுதிக்கு அனுப்ப வன ஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கல்குடா சுழியோடிகள், பிரதேச மக்கள் எனப்பலரும் இணைந்து இரவு பகலாக பிரயத்தனம் எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மர்ஹூம் மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் நினைவேந்தலும், அவர் எழுதிய நூல் வெளியீட்டு விழாவும்

(சர்ஜுன் லாபீர்)

மர்ஹூம் மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் அவர்களின் முதலாவது நினைவேந்தலும், அவர் எழுதிய ''ஈழத்து முஸ்லிம் புலவர்களின் பள்ளு(பிரபந்த) இலக்கியம்'' நூல் வெளியீட்டு நிகழ்வும் இன்று(26)கவிஞர் ஆசிரியர் நவாஸ் சௌபி தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

இப் புத்தக வெளியீட்டு விழாவின் முதல் பிரதி திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அவர்களுக்கு மருதூர் ஏ மஜீட் அவர்களின் புதல்வரும் ஆசிரியருமான றிஸ்வி மஜீட்டினால் வழங்கி வைக்கப்பட்டது.

புத்தகத்தின் ஏனைய பிரதிகளை இந் நிகழ்வில் கலந்து கொண்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.நிசார்(ஜே.பி),சம்மாந்துறை பிரதேசசபை உறுப்பினர் எஸ்.நளீம்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்



பினர்களான எழுத்தாளர் ஏ.எம் பறக்கத்துல்லாஹ், எம்.எச்.எச் நபார் , ஆசிரியர் எம்.டி.ஏ.மாஹீர், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் திட்டத் தவிசாளர் எஸ்.தஸ்தக்கீர், ஏ.எம் ரமீஸ், ஏ.ஆர்.ஆக்கீல், ஏ.எல்.அன்சார் மற்றும் வியூகம் சமூகவலைத்தளப் பணிப்பாளர் எஸ்.ஜனூஸ், ஆகியோருக்கு பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மணிப்புலவர் மர்ஹூம் மருதூர் ஏ மஜீட் அவர்களின் புதல்வியும் கலந்து கொண்டதோடு, இப் நூல் அவர் எழுதிய 20வது நூல் ஆகும். என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# மக்கள் நலன்நோக்கி நாம் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்

## பிரடிஜகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார்

( வாஸ் கூஞ்ஞ)

எந்தவொரு திணைக்களமோ அல்லது நிறுவனமாக இருந்தாலும் நாம் மக்களுக்காகவே சேவைகளை மேற்கொண்டு வருகின்றோம். அந்தவகையில் பிரடிஐகள் குழுவும் மக்கள் நலன்நோக்கியே தனது பணியை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு நாம் அனைவரும் மக்கள் நலன் நோக்கி ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என வேண்டி நிற்கின்றோம் என மன்னார் பிரடிஐகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பிரடிஐகள் குழுவின் அங்கத்தவர்கள் வருட இறுதி ஒன்றுகூடலை புதன்கிழமை (22.12.2021) மன்னார் ஆஹாஸ் ஹொட்டலில் நடாத்தியது. இதில் மன்னார் மாவட்ட சகல திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் இவ் ஒன்றுகூடல் இடம்பெற்றது

இதன்போது மன்னார் பிரடிகைள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இங்கு தனது உரையில் தெரிவிக்கும்போது

இந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளாக பல்வேறு நிலைகளிலே நாம் தலைமைத்துவம் வகித்து மக்களை முன்னுரிமை படுத்தியவர்களாக இங்கு நாம் ஒன்றுகூடியுள்ளோம்.

நாம் பலதரப்பட்ட பொறுப்புகளில் இருப்பதுக்கு மக்களே காரணமாகும். மக்கள் இல்லையேல் நமக்கு இந்த நிலை இருக்காது.

நாம் செய்யும் ஒவ்வொரு பணியும் மக்களுக்காகவே. பிரடிஐகள் குழுவானது மக்களுக்காகவே தங்களை அர்பணித்து சேவைகளை செய்து வருகின்றது.

இந்த நிலையில் இவ் குழுவானது அதிகாரிகளுடன் முரண்பட்டாலும் அல்லது ஏற்கமுடியாத தன்மைகள் ஏற்பட்டாலும் இவை யாவும் மக்களுக்காகவேதான் நாங்கள் செயல்படுகின்றோம்.



இங்கிருக்கும் ஒவ்வொரு தலைவர்களும் மக்களுக்காகவே உங்கள் சேவைகளை செய்து வருகிக்றீர்கள் அந்தவகையில் நாங்கள் மக்கள் சார்பகாக உங்களைவ வாழ்த்தி நிற்கின்றோம்.

உங்கள் இந்த சேவையின்போது நீங்கள் பல கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்குகின்றீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

இதை எமது பிரடிஐகள் குழு உணர்ந்து உங்களுக்கு ஒரு நன்றி கடனாக இந்த ஒன்றுகூடுதலை நடாத்துகின்றோம். என்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்த செயல்பாட்டின் மூலம் நீங்கள் புத்துணர்வு பெற்று தொடர்ந்து மக்களுக்கு சேவைபுரிய வேண்டும் என்ற ஊக்கியாகவும் இது திகழும் என்ற நோக்கில் நாங்கள் இந்த ஒன்றுகூடலை மேற்கொள்ளுகின்றோம்.

தற்பொழுது எமது மக்கள் இன்பத்திலும் துன்பத்திலும் நோய் நொடியிலும் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அவர்களை மறக்காது நாம் தொடர்ந்து அவர்களுக்கு பணி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மக்களே எமது இதயம். இவர்களுக்கு பணி செய்வதே எமது நோக்காக இருப்பதால் எமது பணியானது காத்திரமானதாக இருக்க வேண்டும்

இதை உணர்ந்தே நீங்களும் எங்கள் அழைப்பை எற்று இங்கு வந்திருப்பது மகிழ்ச்சியாக இருப்பதுடன் உங்கள் வருகையானது எங்களுக்கு மக்களாகவே காணப்படுகின்றீர்கள்.

ஆகவே இந்த பிரடிஐகள் குழு மக்களுக்காக தங்கள் சேவையை செய்யும்போது நீங்களும் எமக்கு ஆதரவு தந்து மக்கள் நலன்நோக்கி செயல்பட ஒத்துழைப்பு வழங்கவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அதிகாரிகளாக திகழும் உங்களுக்கு ஊடாகத்தான் நாங்கள் மக்களுக்காக சேவை செய்ய முடியும்

ஆகவே நாம் ஒன்றினைந்த பணியாக மக்களுக்கு சேவை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆகவே நாம் ஒன்றுபட்டு மக்களுக்கான சேவைகளை செய்வோம் என இந்நேரத்தில் வேண்டி நிற்கின்றோம் என இவ்வாறு தெரிவித்தார்.

# விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முகக்கவசம், தொற்று நீக்கி




(தலவாக்கலை பி.கேதீஸ்)

விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முகக்கவசம், தொற்று நீக்கி போன்றன தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதியொதீக்கீட்டின் கீழ் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ரமேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு நுவரெலியா மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் மற்றும் , பாதுகாப்பு பிரிவின் நுவரெலியா மாவட்ட பொறுப்பதிகாரி பிரசாத் ரணசிங்க மற்றும் பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.




Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# 13 வது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர்

**(சுமன்)**

13வது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும். 13வது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டு மக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையாவது தக்க வைத்துக் கொள்ளுகின்ற நிலைமையை இங்கு உருவாக்க வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

13வது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிலைப்பாடு சம்மந்தமாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் அரசியல் யாப்பின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக அரசியற் கட்சிகளின் தலைவர்கள் சமூக ஆர்வலர்கள் பலர் கருத்துகளை முன்வைத்து வருகின்றார்கள். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதே போன்று 13வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் மற்றும் மலையகம், முஸ்லீம் கட்சிகள் இணைந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துரையாடி இருக்கின்றார்கள்.

இந்த 13வது திருத்தச்சட்டம் இலங்கையில் நடைமுறைக்குகக் கொண்டு வரப்பட வேண்டும் என தற்போது அனைவராலும் பேசப்பட்டு வருகின்றது. இது புதிய விடயம் அல்ல. இருப்பினும் தற்போதைய சூழலில் அது பார்க்கப்படுகின்ற விடயமாக இருக்கின்றது. அந்த விடயங்கள் தொடர்பாக கட்சிகள் கூடி ஆராய்ந்து வருகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்;கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, 13வது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்;கான தீர்வின் ஆரம்ப விடயம் என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இதில் 13வது திருத்தச் சட்டம் என்பது என்ன? அதனை நடைமுறைப் படுத்துகின்ற போது அதிலுள்ள சாதக பாதக விடயங்கள் என்ன? என்பதோடு இந்த விடயத்தில் எல்லோருடைய கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது தொடர்பிலும் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

உண்மையில் 13வது திருத்தச் சட்டம் என்பது இலங்கை இந்திய ஒப்பந்;தத்தின் ஒரு ஆணிவேராகவே பார்க்கப்படுகின்றது. இது இந்தியாவினால் இலங்கை மீது போட்டிருக்கும் ஒரு கடிவாளமாகவே இருக்கின்றது. 13வது திருத்தச்சட்டம் இலங்கையின் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்டு இன்றுவரை நடைமுறையில் இருந்தாலும் நிர்வாக அலகுகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

தமிழர்களைப் பொருத்தவரையில் ஆயத போடராட்ட காலத்திலும் சரி தற்போதும் சரி நாங்கள் எமது உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பில் ஆயுத ரீதியாகவும், தற்போது அரசியல் ரீதியாகவும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம். நோர்வே ஒஸ்லோவில் இடம்பெற்ற தீர்மானம். திம்புவில் இடம்பெற்ற தீர்மானம் இவை இரண்டும் எமது ஆயுத போராட்ட காலத்தில இடம்பெற்றது. இவை இரண்டுமே பரஸ்பரம் நம்பிக்கையிழந்து செயழிழந்து நிற்கின்றது

நாங்கள் ஒவ்வொரு முயற்சிகளும் எடுக்கின்ற போது அக்காலத்தில் இதனால் எத்தகு விளைவுகள் எற்படும் என்பதனை ஆராய்ந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கேற்றவாறு எமது திட்டங்களை வகுத்து நாம் செயற்பட்டே வந்தோம்.

உண்மையில் ஒஸ்லோ உடன்படிக்;கையின் அடிப்படையில் ஒரு



தீர்வினைப் பெறுவதற்கான முயற்சி நடைபெற்றது அது இடைநடுவில் கைவிடப்பட்டது. சுமார் ஐந்து ஆண்டுகளாக உலக வல்லமை மிக்க நாடுகளின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அந்தப் பேச்சுவார்தைக் காலங்களில் எல்லாம் தமிழர்களுக்கு சுயநிர்ணய அடிப்படையில் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரித்துக் காட்டக்கூடியவாறான செயற்பாடுகள் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு இவ்வாறாக அழுத்தம் கொடுக்கவில்லை. இலங்கையின் ஏமாற்று வித்திதைகளை உலகம் நம்பி அந்த வழியில் பயணித்தமையால் அந்தப் பேச்சவார்த்தை அவ்வாறே கைநழுவிச் சென்றது.

அதே போன்று, டோக்கியோ மாநாட்டிலே நாங்கள் பங்குபற்றினால் என்ன விளைவுகள் ஏற்படும் பங்குபற்றாமல் விட்டால் என்ன வளைவுகள் எற்படும் என்பதையும் நாங்கள் முற்கூட்டியே எமது தலைவர்கள் அறிந்திருந்தார்கள். அந்த நிலையிலே டோக்கியோ மாநாட்டிலே விடுதலைப் புலிகளின்சார்பில் யாரும் பங்கேற்காமல் போனதும் ஆயுத போராட்டத்தின் பின்னடைவிற்கு ஒரு காரணமாக அமைந்தது.

அதே போன்று இன்றைய சூழலில் தமிழ் மக்களின் நலன் சார்ந்;த விடயங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மிகத் தெளிவாக விளங்கிச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு கால கட்டத்திலும் நாங்கள் நம்பிக்கையோடும், உலகத்தின் அனுசரணையுடனும் பேச்சகளிலே ஈடுபட்டோம். தற்போது இந்த 13வது திருத்தச் சட்டத்தை இந்;தியாவின் அனுசரரணையுடன் முழுமையாகச் செயற்படுத்தவதற்கு தமிழக் கட்சிகள் முன்வந்து செயற்படுகின்றார்கள்.

தற்போது நாட்டில் ஆட்சியில் இருக்கின்ற இந்த அசாங்கம் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிப்பது அல்லது அதனைச்செயலிழக்கவைப்பது போன்ற நடவடிககைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருகின்றது. அதற்காகத் தான் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு புதிய அரசியலமைப்பின் ஊடாக 13வது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை அரசாங்கம் எமது சுயநிர்ணயக் கொள்கை, தமிழர்களின் தேசியம் அனைத்தையும் மிக வேகமாக அழித்து இங்கே தமிழ் மக்களுக்கான தேசிய இனப்பிரச்சினை இல்லை என்பதை உலகத்திற்குக் காட்டி தமிழர் தாயத்தினை ஆக்கிரமித்து தனிச் சிங்கள பௌத்த நாடாக மாற்றவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த விடயங்களில் நாங்கள் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். 13வது திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக பிடுங்கி எறியப்படுமாக இருந்தால் இலங்கை சீனாவின் பக்கம் முழுமையாகச் சாய்ந்து விடும். இந்;தியாவின் உதவியைக் கோரி நிற்கும் தமிழர் தரப்பு நிச்சயமாகத் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருக்கின்றது. 13வது திருத்தச் சட்டத்தைத் தாண்டி எம்மால் போக முடியாத நிலை இருந்தாலும். அதன் கீழ் போகாமல் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டி தேவையும் எமக்கு இருக்கின்றது.

இந்தத்திருத்தச் சட்டம் முழுமையாக அமைய வேண்டுமாக இருந்தால் அதற்குப் பிரதான பங்காளியாக இருக்க வேண்டியது இந்தியா. இந்தியாவின் நலன் சார்ந்த விடயங்களில் ஈழத்தமிழர்கள் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் நிச்சயமாக இந்தியா ஈழத்தமிழர்களின் நலனிலே மிகவும் அவதானமாகவும், நம்பிக்கையைப் பேணும் வகையிலும் செயற்பட வேண்டும். அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் நிச்சயமாக 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக இருக்கின்ற எமது அதிகாரங்களையென்றாலும் தமிழர் தரப்பு கைப்பற்றக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றது. அந்த வகையில் தற்போதைய நிலையில் 13வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையே இங்கு இருக்கின்றது.

13ஐ நாங்கள் நிராகரிக்க முயற்சி செய்வோமாக இருந்தால் இந்தியாவினால் இலங்கை மீது போடப்பட்டிருக்கின்ற கடிவாளம் அறுத்தெறியப்படும். அதன் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் நில ஆக்கரமிப்புகள், பௌத்த மயமாக்கல் திட்டங்கள் போன்ற அனைத்து விடயங்களும் மிக இலகுவாக இலங்கை அரசாங்கத்தினால மேற்கொள்ளப்படும்.

13ஐத் தாண்டி எமது மக்;களுக்கான உரிமைகளை வழங்குவதாக இலங்கையில் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறிய கருத்து இந்த விடயங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில் வடக்கு கிழக்கு பகுதியில் சிங்களக் குடியேற்றம் முழுமையாக நிறைவேற்றப்படுமாக இருந்தால் வடக்கு கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறையும், சிங்களப் பிரதிநிதிகள் அதிகமாகத் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு உருவாகும். அந்த நிலைமை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் எவ்வகையான அதிகாரங்கள் வடக்கு கிழக்கிற்கு பகிரப்பட்டாலும் அது எமக்குத் தேவையற்றதாகவே அமையும்.

இன்று வடக்க கிழக்கில் சீனாவின் பிரவேசம், ஆதிக்கம், அபிவிருத்தி என்ற போர்வையில் சீனாவினால் ஆக்கிரமிக்கப்படும் நிலங்கள் போன்றன தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும். இலங்கையில் தன்நிறைவுப் பொருளாதாரம் அமைவதற்கு சீனா ஒருபோதும் அனுமதிக்காது. விலை கொடுத்து இலங்கை நாட்டை வாங்கிக் கொள்வதற்காகவே சீனா முயற்சி செய்கின்றது. அந்த முயற்சியில் சீனா ஈடுபடுகையில் சீனாவைப் பயன்படுத்தி தமிழர்களுக்கெதிராக தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற சிங்கள தேசம் அறிவிலித்தனமாக செயற்படுகின்றது.

உண்மையில் தமிழ் மக்களுக்கான தீர்வாக வடக்கு கிழக்கு இணைந்த தம்மைத் தாமே ஆளக்கூடிய ஒரு அலடிகை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் எக்காலத்திலும் முயற்சி செய்ததும் இல்லை, முயற்சி செய்யப் போவதும் இல்லை. தமிழர்களுக்கு இவ்வாறானதொரு தீர்வுத் திட்டத்தைத்தான் வழங்கப் போகின்றோம் என்று சொல்லி தமிழர் தரப்பினை பேச்சுக்கு அழைத்ததும் இல்லை. நாங்கள் எங்கள் கொள்கைக்கு அமைய இலங்கை அரசாங்கத்தோடு வலுக்கட்டாயமாகவே பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நீண்ட காலம் கிடப்பிலே கிடந்த இந்த 13வது திருத்தச்சட்டத்தை நாங்கள் இன்று கதைத்துக் கொண்டிருக்கின்றோம். 13வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தமிழர்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஒரு நேரிய பாதையிலே பயணித்தால் மாத்திரமே அதனை நடைமுறைப்படுத்தலாம் என்ற விடயம் உணரப்பபட்டு இன்று சில முன்னெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்புகளும் மக்களை ஒரு குழப்பகரமான நிலைமைக்கு இட்டுச் செல்லுகின்றதே தவிர ஒருமித்து ஒரு கொள்கையின் அடிப்படையில் எமது மக்களைப் பயணிக்ககக் கூடியவாறான முன்னெடுப்புகளாக அமையவில்லை. நாங்கள் பல கூட்டங்களைக் கூடி கதைப்பதற்கு முன்னர் நாங்கள் எங்களை மாற்றிக் கொண்டு சரியான முடிவுகளை எடுக்கக் கூடிய நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு தமிழ்த் தேசித்திற்கு வெளியில் நின்று செயற்படுகின்ற கட்சிகளும், 13வது திருத்தச்சட்டம் தேவையற்ற விடயம் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஒருசாராரும் இருக்கின்றார்கள். 13வது திருத்தச் சட்டம் ஈழத் தமிழர் நலன்சார்ந்த விடயங்களுக்கு மட்டும் கொண்டுவரப்பட்ட விடயம் அல்ல என்பதைத் தெளிவாக நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

13வது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கைக சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும். பெரும்பானன்மை சமூகம் என்று சொல்லப்படுகின்ற சிங்கள தரப்புகளால் ஒருமித்த ஒரு ஆட்சியைக் கொண்டு வரலாம்.

பிரிக்கப்பட்ட மாகாணங்களில் காணி பொலிஸ் அதிகாரங்களை நிலை நிறுத்தியவாறு ஒரு அரசியலமைப்பில் சட்டமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது என்று சொன்னால் தற்போதைய நிலைமையில் அதனை நாங்கள் ஏற்று முன்கொண்டு செல்ல வேண்டி நிலைமை தான் இருக்கின்றது. அது தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் ஒவ்வொரு அரசியற் தலைவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தற்பொது எங்களுக்கு இருக்கின்ற பலம் என்று சொல்லப்படுகின்ற அந்த விடயத்தை நாங்கள் எவ்வாறு கையாளமுடியும் என்று பார்;க்க வேண்டும். அதனைக் கொண்டு வந்து விட்டால் போதுமென்று இருக்காமல் அதனை எவ்வாறு எமக்குச் சாதமாக பலம்மிக்க நிருவாக அலகாக மாற்ற முடியும் என்பது பற்றிக் கலந்தாலோசித்து இந்திய அரசாங்கத்தோடு பேச்சவார்த்தைகளில் ஈடுபட்டு 13வது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டு மக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையாவது தக்க வைத்துக் கொள்ளுகின்ற நிலைமையை இங்கு உருவாக்க வேண்டும்.

எந்தப் பலமும் இல்லாமல் நாங்கள் ஒரு விடயத்திற்குள் பயணிக்க நினைப்பது நிச்சயமாக எதிர்காலத்தில் மீண்டும் ஒரு அழிவினையே எற்படுத்தும். வரலாற்று ரீதியில் நாங்கள் தமிழ் மக்களின் விடுதலை தொடர்பான விடயங்களில் அவதானித்துக் கொண்டே வருகின்றோம். எமது கருத்துகளும் செயற்பாடுகளும் ஒருமித்த பாதையில் ஒரே கொள்கையில் உண்மையாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.




## இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுடன் கனடா தமிழரசுக் கட்சி உறுப்பினர்களின் கலந்துரையாடல்

**(வடமலை ராஜ்குமார் )**

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு.மாவை சோ. சேனாதிராசா அவர்களுடனான மெய்நிகர் இனணயவழிச் சந்திப்பு ஒன்று கனடா தமிழரசுக்கட்சிக் கிளையினரின் ஏற்பாட்டில் 22.12. 2021 புதன்கிழமை இரவு 8:30 மணி தொடக்கம் 10:00 மணிவரை இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் கனடா தழிழரசுக் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள், கட்சியின் தலைவர் திரு.மாவை சோ. சேனாதிராசா அவர்களுடனும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்து அங்கத்தவர்களுடனும் சேர்ந்து கட்சியின் வளர்ச்சி ஒன்றே எமது குறிக்கோள் என்றும் எந்தவித பாகுபாடுமின்றி வேலை செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கனடாவில் உள்ள அனைத்து தழிழரசுக் கட்சிய ஆதரவாளர்களை ஒரே குடையின் கீழ் இணைப்பதே எமது குறிக்கோள் என்றும் புதிய அங்கத்தவர்களை இணைத்து எமது கட்சியை மேலும் பலமான அமைப்பாக உருவாக்க வேண்டும் என்றும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

மேலும், விரைவில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடனும் மெய்நிகர் இணையவழிச் சந்திப்புக்களை மேற்கொள்ளுவது என்றும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

**ஸ்ரீனிவாசன் சுப்பிரமணியம்**
**செயலாளர்**
**கனடா தமிழரசுக் கட்சி**

**தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களாக இணைந்து கொள்வதற்கு அழையுங்கள்.**
**சோமா சச்சி +1 (647) 2023234**
**சோதி செல்லா+1 (647) 4098966**




# சேவை நோக்கில் முத்துவிழா காணும் மட்டக்களப்பு சீலோம் வைத்தியசாலை

## (வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரன்)

(சுமன்)

இலாப நோக்கில் அல்லாமல் சேவை நோக்கில் வசதி குன்றியோர்க்கும் சேவை செய்யும் தனியார் வைத்தியசாலையாக சீலோம் வைத்தியசாலை திகழ்கின்றது என மகப்பேற்றியல் பெண்நோயியல் நிபுனர் வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சீலோம் வைத்தியசாலை தனது 30வது அண்டு நிறைவினைப் பூர்த்தி செய்துள்ளமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மருத்துவ சேவை மகோன்னதமான சேவையாகும். நோயினால் வாடுவோருக்கு முதற்கண் மருத்துவராக இருப்பவர் இறைவனே அவர் தம் பிரதிநிதிகளாக பூவுலகில் மருத்துவ சேவையை வழங்குகின்றவர்களை குறிப்பிடலாம். இத்தகையோர் பணிபுரிவதற்கும் மக்கள் அச் சேவையினை பெற்று கொள்வதற்கும் மருத்துவ கட்டமைப்பு இன்றியமையாததாகின்றது.

இக் கட்டமைப்பில் கட்டடங்கள், தளபாடங்கள், மருத்துவக்கருவிகள், நவீன உபகரணங்கள், ஆய்வுகூட வசதிகள், கழிவகற்றும் பொறிமுறை என பலதரப்பட்டதும் பல்வகையானதும் அடங்குகின்றன. இவற்றினை உருவாக்கி, பொருத்தி, பராமரித்து காலத்திற்கு காலம் நவீனமயப்படுத்தி மருத்துவ சேவையினை வழங்குவது பாரியதொரு பணியென்பது கண்கூடு.

இலங்கையில் வட கிழக்கு பகுதிகளில் போர் உக்கிரமடைந்த காலப்பகுதிகளில் வளங்கள் பொருந்திய அரச வைத்தியசாலைகள் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே இயங்கி வந்தமை யாவரும் அறிந்ததே. குறிப்பாக நிபுணத்துவ சேவைகள் வழங்கக்கூடிய விற்பன்னர்கள் பற்றாக்குறையாக இருந்த காலம். 1990ன் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் மாபெரும் அரச வைத்தியசாலையாக திகழ்ந்திருந்த மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலே விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில வைத்திய நிபுணர்களே கடமையாற்றினர். சத்திரசிகிச்சை பிரிவிற்கு எல்லையற்ற வைத்தியர்கள் (Medicine Sans Frontiers (MSF) என்னும் தன்னார்வ அமைப்பை சேர்ந்த வெளிநாட்டவர்களே கடமையாற்றினர். சத்திரசிகிச்சைசேவை வழங்கலுக்கென தரமான விற்பன்னர்கள் தேவை மிகவும் அதிகமாக உணரப்பட்ட காலகட்டமது.

இத்தேவையை உணர்ந்து ஒரு சில முக்கியஸ்தர்கள் செயற்பட்டனர். அக்காலப் பகுதியில் திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயராக இருந்த பேரருட் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் குழு ஒன்று செயற்பட்டது. ஒரு தனியார் வைத்தியசாலையினை மட்டக்களப்பு மைய பகுதியில் ஆரம்பித்து கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மறைநூலாகிய திருவிவிலியத்தில் குறிக்கப்பட்டிருந்த குணமளிக்கும் ஆற்றல் கொண்டதாக கருதப்பட்ட சிலோவாம் குளம் என்னும் பெயரிலுள்ள சிலோவாம் என்னும் பதத்தினை முன்னிலைப்படுத்தி சீலோவாம் வைத்தியசாலை என்ற பெயரில் மட்டக்களப்பு லொயிட்ஸ் அவனியுவில் உள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் அவர்களுக்கு சொந்தமானதும் சுபராஜ; படமாளிகைக்கு அண்மித்ததுமாகிய கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் பிரபல்யமான சத்திரசிகிச்சை நிபுணராக அரச வைத்தியசாலைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும் பலராலும் அறியப்பட்டவருமான வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் து.வு.சேவியர் அவர்கள் இவ் வைத்தியசாலையில் முழு நேர சத்திர சிகிச்சை நிபுணராக பணியாற்றினார். ஆயர் அவர்களின் அழைப்பிற்கிணங்க உலகளாவிய ரீதியிலும் இலங்கையில் வடபுல யாழ்ப்பாணத்தில் திருச்சிலுவை வைத்தியசாலை எனும் வைத்திய வழங்கல் சேவை நிலையத்தின் மூலம் மருத்துவ சேவை வழங்க தகுந்த பயிற்சி பெற்ற திருச்சிலுவை அருட் கன்னியர்கள் (Holy Cross Sisters). இவ் வைத்திய சாலையில் பணிபுரிய வந்தார்கள். இவ் வைத்தியசாலையில் பணியாற்ற உள்ளெடுக்கப்பட்ட ஆளணியருக்கான பயிற்சிகள் மூன்றுவருட காலத்திற்கு தகுந்த பயிற்றப்பட்ட தாதியியல் பயிற்றுவிப்பாளர்களாலும் வைத்திய நிபுணர்களாலும் முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சத்திர சிகிச்சை, மகப்பேறு, சிசு கவனிப்பு ஆகிய விசேட துறைகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்தோடு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிபுணர்களால் தொடர்ந்தேற்சியான பயிற்சிகளும் இவ் ஆளணியினர் பெற்றனர். இவ்வாறாக தகுந்த பயிற்சிபெற்ற ஆளணியினரை உருவாக்கி பணிபுரிந்த ஒரே தனியார் வைத்தியசாலையாக சீலோவாம் வைத்தியசாலை திகழ்ந்தது. சிறிது காலம் திருக்குடும்ப அருட் கன்னியர்கள்



(Holy Family Sisters) இவ் வைத்தியசாலையில் பணியாற்றினர்.

மட்டக்களப்பு புகையிரதநிலைய வீதியில் பிரபல்யமாக இயங்கி கொண்டிருந்த வின்சன்ட் மருத்துவமனை 2000 - 2002 ஆண்டுகளில் ஆயர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதுவரை காலமும் ஏனையவரின் கட்டடத்தில்; இயங்கி வந்த சீலோவாம் மருத்துவமனையை சொந்தக் கட்டடத்தில் இயங்க வைக்க இதனால் முடிந்தது. இதன்படி 2002ம் வருடம் சீலோவாம் வைத்தியசாலை சேவைகள் வின்சன்ட் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதுடன் அண்மைக் காலம் வரை வைத்திய நிபுணர் சேவியர் அவர்களின் சேவையும் தொடர்ந்தது. அத்துடன் கடந்த 20 வருடத்திற்கு மேலாக வைத்திய நிபுணர்களின் பிரத்தியேக சேவை இவ் வைத்தியசாலைகளில் தொடர்கின்றது.

மிக இக்கட்டான கால கட்டத்தில் மட்டக்களப்பு மாநகரில் ஆரம்பிக்கப்பட்ட சீலோவாம் வைத்தியசாலையின் மூலம் மருத்;துவ பயன் பெற்றவர்கள் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களாவர். முழு நிறைவான சேவை வழங்கலில் இவ் வைத்தியசாலை அர்ப்பணிப்புடன் திகழ்ந்ததற்கு காரண கர்த்தாக்களாக இருந்தவர்களுடன் குறிப்பாக வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் சேவியர் அவர்கள் திருச்சிலுவை அருட் கன்னியர்கள் மற்றும் பயிற்றப்பட்ட ஆளணியினரும் ஆவர். இவர்களுக்கு உறுதுணையாக ஆயர் அவர்களுடைய முழுமையான பங்களிப்பையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம்.

ஏறத்தாழ 15 வருடங்களுக்கு முன் அரச வைத்தியசாலை தாதியர் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் உள்ளிட்ட ஆளணியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளை வைத்திய சேவை மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் சீலோவாம் வைத்தியசாலையானது தனது பயிற்றப்பட்ட ஆளணியினருடனும் ஆய்வு கூடம், சத்திர சிகிச்சை கூடம், பிரசவ விடுதி போன்றவற்றூடாக மக்களுக்கு தொடர்ந்து சேவை வழங்கியதும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

எண்ணற்ற மக்களுக்கு தரமிக்க சிகிச்சை வழங்கிய பெருமை கொண்ட இவ் வைத்தியசாலை இவ் வருடம் (2021) தனது 30 ஆண்டு நிறைவு முத்து விழாவை கொண்டாடுகின்றது.

இவ் வைத்தியசாலையின் தலைவராக மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் மேதகு யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் கண்காணிப்பில் சிலோவாம் வைத்தியசாலை இயங்குகின்றது. சீலோவாம் எனும் பெயர் மருவி சிலோம் என்ற பெயர் மக்கள் வாயிலும் மனதிலும் நிறைந்துள்ளது. வைத்தியசாலையினை வளர்ச்சிப்படியில் இட்டுச் செல்ல தேவையான நவீன உபகரணங்கள் சத்திரசிகிச்சை மேம்பாடு போன்றவற்றில் ஈடுபாடு காட்டப்படுகின்றது. இலாப நோக்கில் அல்லாமல் சேவை நோக்கில் வசதி குன்றியோர்க்கும் சேவை செய்யும் நிறுவனமாக இது இயங்குகின்றது. சீலோவாம் என்ற பெயரின் ஆங்கில பதமான SILOAM எனும் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் முதலெழுத்தாகக் கொண்ட சொற்களைக் கோர்த்து SERVICE IN LOVE OF ALL MANKIND எனும் சொற்றொடரை (தமிழ் மொழி பெயர்ப்பாக) அனைத்து மனித குலத்திற்கும் அன்பிலான சேவை எனும் விருதுவாக்கை கொண்டு இயங்குகின்ற சீலோவாம் வைத்தியசாலையானது தொடர்ந்தும் தனித்துவம் மிக்கதும், சுயமாக இயங்கக்கூடியதுமாக மருத்துவ சேவை வழங்கலை மேற்கொண்டு மக்கள் சேவை மகேசன் சேவையாக ஆற்ற இறையருள் இறைஞ்சி நிற்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 17 ஆண்டுகள் கடந்தும் மக்களுக்கு கிடைக்காத மருதமுனை சுனாமி வீடுகள்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. மருதமுனை 65 மீட்டர் வீட்டுத்திட்டத்தில் 78 வீடுகள் மக்களுக்கு வழங்கப்படாமல் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமிப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காக கட்டப்பட்ட வீட்டுத் திட்டமே மருதமுனை 65 மீட்டர் வீட்டுத் திட்டமாகும்.

கடற்கரையிலிருந்து 65 மீட்டர் எல்லைக்குள் குடியிருந்து இருப்பிடங்களை இழந்த பாதிக்கப்பட்ட மக்களுக்காக கிராமத்தின் மேற்குப் புறமாக கிடந்த மேட்டு வட்டை காணியில் தேசிய வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சால் 186 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் நிர்மாண வேலைகள் 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு வீடுகள் வழங்கப்படும் என அப்போதைய மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்.

எனினும் பல்வேறு மக்கள் போராட்டங்கள், தடைகள் என நீதிமன்ற கதவுகளையும் முட்டிமோதி முதற்கட்டமாக 2012 ஆம் ஆண்டு 50 வீடுகள் கையளிக்கப்பட்டன. 178 வீடுகளில் இதுவரை நூறு வீடுகள் மாத்திரமே மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. மீதமாக உள்ள 78 வீடுகளும் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 17 ஆண்டுகள் தாண்டியும் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாத நிலையில் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றன. காலத்துக்கு காலம்



வரும் அரசியல் தலைவர்களால் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் மக்களுக்கு வீடுகள் கிடைக்க வில்லை. இன்னிலையில் குறித்த 78 வீடுகளும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன.

வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள், ஜன்னல்கள் திருடப்பட்டும் உடைக்கப்பட்டும் காணப்படுகின்றன. தற்போது வீட்டு கூரைகளும் களவாடப்பட்டு வருகின்றன. மனிதர்கள் மாத்திரமல்லாது விலங்குகளும் அசிங்கங்கள் செய்யும் மறைவிடமாக இப்பகுதி மாறி வருவதாக மக்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர்.

சுனாமி அனர்தத்தின் போது கருவறையிலிருந்த பிள்ளைகள் இன்று இந்த கல்வீடு தமக்கு கிடைக்காதா? என்று காத்திருந்து காத்திருந்து காலத்தை கடத்தி வருகின்றனர். இன்னும் வாடகை வீடுகளில் சிலர் வாழ்ந்து வருகின்றனர். இளைஞர் சமூகம் மறைந்திருந்து போதை வஸ்து பாவிக்கும் இடமாகவும் அருகில் வசிப்பவர்களுக்கு தொல்லை தரும் இடங்களாகவும் இந்த வீட்டுத்திட்டம் மாறியுள்ளன.



கிராமத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக மாறி வரும் இந்த வீடுகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்று கடந்த 17 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் இந்த வீட்டுத் திட்டத்தை அண்மித்த பகுதிகளில் குடியேறிய மக்கள் தமது அவலக் குரல்களை எழுப்பி வருகின்றனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நினைவு நாளான (26.12. 2021) இம்மக்கள் குறித்த இந்த 78 வீடுகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வராது இருப்பது ஏன்? என கேள்வி எழுப்பி நிற்கின்றனர். விரைவில் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்

## கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் எனும் திட்டத்திலான உள்ளூராட்சி சபைப் பெண் தலைவிகளுக்கான செயலமர்வு



(வி.சுகிர்தகுமார்)

சேர்ச் போ கொமன்ட் கிறவுண்ட் (Search for common ground) நிறுவனத்தின் நிதிஅனுசரணையுடன் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படுகின்ற கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் எனும் திட்டத்திலான உள்ளூராட்சி சபைப் பெண் தலைவிகளுக்கான செயலமர்வு அம்பாரை தனியார் விடுதியில் இன்று நடைபெற்றது.

சிவில் சமூக அமைப்பின் தலைவிகளால் உள்ளூராட்சி சபைப் பெண் தலைவிகளின் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட



ரீதியில் பிரேரணை ஒன்றை தயாரிப்பதற்குரிய குழு விவாதம் (panel discussion) இதன்போது இடம்பெற்றது.

நிகழ்வின் இலகுபடுத்துனராக சொர்ணலிங்கம் கலந்து கொண்டதுடன் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஷீஸ், பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் இணைப்பாளர் வாணி சைமன், WILL திட்ட இணைப்பாளர் ஜனுஷியா சுஜீதராஜ் , உள்ளூராட்சி சபை பெண் தலைவிகள், சிவில் சமூக பெண் தலைவிகள், சேர்ச் போ கொமன்ட் கிறவுண்ட் (search for common ground) நிறுவனத்தின் சார்பாக ( (Gender Advisor) , நளினி ரத்னராஜா (senior project coordinator), சகுந்தலை முத்துராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 3ஆவது ஊடகவியலாளர்களின் வட்ட மேசை மாநாடு ஊடகவியலாளர்களுக்கும் உள்ளூராட்சி சபை பெண் தலைவிகளுக்கும் இடையே நடைபெற்றது. இதன்போது தேவை மதிப்பீடு செய்து வளங்களை திரட்டுதல் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. குறித்த நிகழ்விற்கு வளவாளராக அன்பழகன் குரூஸ் மற்றும் SFCG சார்பாக நவாஸ் NGO coordinator இர்பான், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள், உள்ளூராட்சி சபைப் பெண்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி மன்றங்களின் காலத்தை நீடிப்பதா முடிவுறுத்துவதா?

### இன்னும் இருவாரங்களில் தெரியும் என்கிறார் அமைச்சின் செயலாளர் வீரசேகர





( வி.ரி.சகாதேவராஜா)

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் காலத்தை நீடிப்பதா அல்லது முடிவுறுத்துவதா? என்பது இன்னும் இருவாரங்களில் தெரியும். அதுவரை பொறுத்திருங்கள்.

இவ்வாறு மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் செயலாளர் டபிள்யு. எம்.எம்.பி.வீரசேகர கிழக்குமாகாண உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கான இரண்டுநாள் வதிவிடச்செயலமர்வு கொழும்பு மத்துகம குக்குலேகங்கலாயா லெய்சர் நட்சத்திரவிடுதியில் கடந்த இருதினங்களில் நடைபெற்றது.

ஐரோப்பிய யூனியனின் நிதிஅனுசரணையுடன் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் திறன்அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இவ்வதிவிடச்செயமலர்வு நடைபெற்றது. அங்கு உரையாற்றிய செயலாளர் வீரசேகர மேலும் கூறுகையில்:

வருமானம் குறைந்த சபைகள் நினைத்தால் நிச்சயமாக அபிவிருத்தி காணலாம். தலைவர்கள் நினைக்க வேண்டும். முயற்சியாண்மை கலாசாரத்தை ஏற்படுத்தி ஏற்றுமதிகளை அதிகரிக்கவேண்டும்.

நான் என்ற கருத்தை விட்டு நாங்கள் என்ற கருத்துடன் எமது நாடு என்ற சிந்தனையுடன் பணியாற்ற வேண்டும்.நாடு முன்னேறவேண்டுமானால் தனிநபர் முன்னேற வேண்டும்.

அரசுக்கு நிதிநெருக்கடி நிலவுவதை அறிவீர்கள். வெளிநாட்டுவருமானங்கள் குறைந்துவருகிறது. வாகன ஆடைத்தொழிற்சாலைகள் குறைவடைந்த்ணீருக்கின்றது. பொருட்களின்விலை அதிகரித்துவருகின்றது.இன்றைய பொருளாதார நெருக்கடிகளை நீங்கள் அறிவீர்கள். எந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தாலும் இத்தகைய நெருக்கடிகளை சந்தித்தே ஆகவேண்டும். டொலரின் மதிப்பு அதிகரித்துசெல்கிறது. ருபா குறைகிறது. காலஞ்செல்ல சுற்றுலாத்துறை வழமைக்குதிரும்பும். அனைத்தும் படிப்படியாக வழமைக்குத் திரும்பும். எதுவும் நிரந்தரமல்ல.

பொதுமக்களுக்கான சேவைகளை உரியநேரத்தில் உரியநடைமுறைகளின்படி செய்யவேண்டும். தற்போது டெங்கு காலம். 347 மன்றங்கள் நாட்டிலுள்ளன. ஆனால்டெங்கு வேலைத்திட்டங்களை பெரும்பாலான சபைகள் முன்னெடுக்கவில்லை என்பதை அறியமுடிகிறது. இது கவலைதரும் விடயமாகும்.

நான் அண்மையில் பாசிக்குடாவிற்கும் ,மீகமவிற்கும் சென்றிருந்தேன் அங்கு நிறைய கழிவுப்பொருட்களை காணக்கூடியதாயிருந்தன. அதனை சுத்தமாகவைத்திருக்க வேண்டிய பொறுப்பு உங்களைச்சார்ந்தது.

பண்டாரவளை நகரசபை தலைவரின் முன்மாதிரியை அனைவரும் அறியவேண்டும். அவரால் முடியுமென்றால் உங்களால் ஏன்முடியாது?. நல்லவேலைத்திட்டங்களை முனனெடுத்து சபைகளின் வருமானத்தை வலுப்படுத்தி சிறந்த மக்கள் சேவைகளைச்செய்ய வேண்டும் என்றார்.

கிழக்கு உள்ளூராட்சிமன்றத்தலைவர்களதும் கருத்துகள் பெறப்பட்டன.





நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுர்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Nummer
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT

# ஆரோக்கியமற்ற பால்மாவுக்காக பணத்தை செலவிடாமல் சகல வளமுமிக்க எமது நாட்டில் உள்நாட்டு பாலுற்பத்தியை மேம்படுத்த வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா

**(நூருல் ஹுதா உமர்)**

அரசாங்கமும், ஆட்சியும் மாறக்கூடியது. உத்தியோகத்தர்கள் மாறலாம், ஆட்சியாளர்கள் மாறலாம் ஆனால் நாடு மாறக்கூடியதல்ல. மின்சாரம், எரிவாயு, பால்மா என்பன இல்லாமல் போனது என்பது ஒருபுறமிருக்க ஏழைகளின் வயிறு பசியாக இருக்கப்போகிறது. 500, 1000, 2000 ரூபாய் கூலிபெறும் ஒருவரின் வாழ்க்கையை நாம் பசியில்லாமல் சமப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. நாட்டில் பாலுற்பத்தியின் மீது கவனம் செலுத்துங்கள் என்று நாங்கள் எப்போதோ கூறிவந்தோம். அப்போது விமர்சனம் செய்தார்கள். இப்போது பாராளுமன்றத்தில் பாலுற்பத்தியின் மீது கவனம் செலுத்துங்கள் என்று கூறும் நிலை தோன்றியுள்ளது. என தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கின் தலைமையில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பிலான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எமக்கு எப்படி சோறு முக்கியமோ அது போன்று நமது பிள்ளைகளுக்கு பால் அத்தியாவசியமானது. நம்மிடம் நல்ல நீர், நிலம், விவசாயிகள் இருக்கிறார்கள் ஆனாலும் சேதனப் பசளையை பற்றி பேசிக் கொண்டிருக்கும் நாங்கள் இயற்கையான பால் உற்பத்தியை இல்லாமலாக்கி விட்டு பால் தேவைக்காக பல மில்லியன் ரூபாய்களை செலவு செய்து பால்மாக்களை இறக்குமதி செய்கிறோம். இந்த பால்மாக்கள் ஆரோக்கியமானதா? போசாக்குள்ளதா? அதனை பாவிப்பதன் மூலம் ஏதாவது பிரச்சினைகள் வருமா? என்பது கூட தெரியாது.



நாட்டில் சாதாரண வாழைப்பழமொன்று 15 ரூபாயளவிலும், பாக்கொன்று 25 ரூபாய் அளவிலும் விற்கப்படும் நிலை உருவாகியுள்ளது. பணமிருந்தாலும் பொருளில்லாத நிலை தோன்றியுள்ளது. யாரிடம் உற்பத்தி பொருள் இருக்கிறதோ அவரே இன்று ராசா போன்றவராக உள்ளார். தயாரிப்பின் மூலப்பொருள்கூட தெரியாமல் சிறுகுழந்தைகள் உண்ணும் மேற்கத்தைய பொருட்களை விட எமது தாய்மார் தயாரித்து கொடுத்த உணவுப் பொருட்கள் ஆரோக்கியமானது. அது போன்ற உணவுப்பண்டங்களை நாம் எமது குழந்தைகளுக்கு தயாரித்து கொடுக்கவேண்டும். இன்று சந்தையிலுள்ள பழங்கள் பார்வைக்கு அழகாக உள்ளது ஆனால் ஆரோக்கியமானதா என்றால் இல்லை என்பதே உண்மை. விருந்தும், மருந்தும் பிரதேச மண்வாசனையை கொண்டு உருவாக்க வேண்டும். நாம் படைக்கப்பட்ட இடங்களை வளைத்தே எமக்கான உணவும், மருந்துகளும் உள்ளது.

நாம் எமது இயற்கையை இழந்துவிட்டு இன்று நோயாளிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். போதிய உணவில்லாமல் பட்டினியுடையவர்களாக இருந்து கொண்டிருக்கிறோம். அதனால எமது பிள்ளைகள் மந்தப்போசணை கொண்டவர்களாக உள்ளனர். காலத்தில் நிலையை சிந்தித்து அரசினால் வழங்கப்படும் நிவாரணங்கள், உதவிகளை சரியாக பயன்படுத்தி உச்சப்பயனை நாம் அடைந்து கொள்ள வேண்டும்.

உலகில் உணவுப் பஞ்சம் ஏற்படும் ஆரூடம் கூறப்பட்டுள்ள இந்த சூழ்நிலையில் எப்படியாவது எமது உணவுகளை நாம் தயாரித்தாகவேண்டும். வயல்களில் விவசாயம் மட்டுமின்றி துணைப்பயிர்களாக மிளகாய், வாழை போன்றவற்றையும் நாம் பயிரிட வேண்டும். எம்மால் மாட்டுப்பாலை நிறைய பெற முடிகிறது. எமது நாட்டில் நிறைய நிலம், புல்வளம் போன்ற நிறைய வளங்கள் அதற்காக உள்ளது. அதனை பயன்படுத்தி எமது பாவனைகளுக்கான சுத்தமான பாலை பெறுவது காலத்தின் தேவையாக உள்ளது. சாதாரணமான ஒரு தோட்டம் செய்பவர் 56 மாடுகளை வைத்துக்கொண்டு பராமரிப்பதன் மூலம் நிறைய விளைச்சல் வந்ததை நாம் கண்டுள்ளோம். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். எமது நாட்டில் பருவப்பெயர்ச்சி மழை பெய்கிறது, நிறைய குளங்கள், ஆறுகள் இருக்கிறது ஆனால் நீரைக்கூட நாம் பணம் கொடுத்து வாங்கி குடிக்கிறோம். இவற்றெல்லாம் பற்றி சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

# திருமலையில் தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின் கன்னி அமர்வு







**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின் முதலாவது மக்கள் சந்திப்பு மற்றும் கன்னி அமர்வு திருகோணமலையில் இடம்பெற்றது

நேற்று (26) திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் வடக்கு கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி க.சுகாஷ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது

தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதான நோக்கமாக வடக்கு கிழக்கு மாகாண தமிழர்களின் அரசியல் தேவைகளுக்கு அப்பால் சட்டரீதியான தேவைகளை பூர்த்தி செய்வது அடிப்படை மனித உரிமை மீறல்களை கண்காணித்து அதட்கான தீர்வினை பெற்றுக்கொடுத்து என்பது இவ்வமைப்பின் பிரதான நோக்கம் என தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி டி.ஜி டியூக் தெரிவித்தார்

மேலும் இவ்வமைப்பு எவ்வித அரசியல் இலாபத்திற்காகவும் இயங்கவில்லை எனவும் மக்களின் சட்டரீதியான பிரச்சனைகளை தெளிவூட்டும் முழு நோக்காகவும் கொண்டு செயற்படும் எனவும் இதன்போது சுட்டிக் காட்டினார்

உதாரணமாக வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பிரச்சனைகள் என கருதும் போது அடிப்படை மனித உரிமை மீறல் பிரச்சனைகள் தொடர்பாகவும் மக்களின் காணி ஏனைய சட்டரீதியான அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பதற்கான ஒரு தெளிவூட்டல் மையமாக இது இயங்கும் எனவும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது

நேற்றைய முதலாவது கன்னி அமர்வில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களின் சார்பாக 35க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இவ் கன்னியமர்வில் கலந்து கொண்டதுடன் திருகோணமலை மாவத்தத்திலுள்ள தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சனைகள் இதன் போது ஆராயப்பட்டதாக தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி ஏ ஜி டியூக் தெரிவித்தார்

மேலும் அமைப்பில் வடகிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு சட்டத்தரணி வீதம் இணைப்பாளராக இணைக்கப்பட்டுள்ளதுடன் இன்றைய நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சட்டத்தரணிகள் என பலரும் கலந்து கொண்டிருந்ததுடன்

தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பில் தெளிவூட்டல்கள் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்றுக்கோள்ளலாம்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த அரசாங்கம் தற்பொழுது வெளிநாட்டு நாணயம் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளது. வெளி நாட்டு நாணயம் பெற்றுக்கொடுப்பதற்கு முதுகெலும்பாக உழைக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் இது. இதனை பயன்படுத்தி மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்;

இன்று இந்த நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து வெளிநாடுகளில் இருந்து வெளிநாட்டு நாணயம் தேடும் இவ்வேளையில் வெளிநாட்டு நாணயம் பெற்றுக்கொடுக்கும்



எமது பெருந்தோட்ட தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க ஆளுங்கட்சியிலும் எதிர்கட்சியிலும் இருக்கின்ற எமது மலையக தொழிற் சங்கங்களும் அனைத்தும் தங்களது தொழிற்சங்க அரசியல் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து போராட்டம் நடத்துவதன் மூலமே எமது தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனைகளை தீர்க்க முடியும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களை வழிநடாத்தும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் ஒன்றுபட்டு செயல்படாமல் பிரிந்து தனித்தனியாக செயல்படுவதால் தோட்ட கம்பனிகள் இதனை பயன்படுத்தி சர்வாதிகாரம் முறையில் தோட்டத் தொழிலாளர்களை பழி வாங்குகின்றார்கள். தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக வழி நடத்துகின்றார்கள். தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க வேண்டும். என வர்தமானியில் அறிவித்த பின்பு தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு பல கெடுபிடிகளை செய்கின்றனர்.

வேலை நாட்கள் குறைப்பு தேயிலை கொழுந்து நிர்வையில் கெடுபிடிகள் செய்கின்றனர். ஒரு நாள் சம்பளத்திற்கு 18 கிலோ முதல் 20 கிலோ வரை கொழுந்து பறிக்க வேண்டும் என தோட்ட நிர்வாகம் அழுத்தம் கொடுக்கின்றனர். 10 கிலோ 12 கிலோ கொழுந்து பறித்தால் அரை நாள் சம்பளம் கூட வழங்கப்படுவதில்லை. ஒரு கிலோவிற்கு 40 ரூபா வீதம் வழங்கப்படுகிறது. தோட்டங்கள் முறையாக பராமறிக்காதல் தோட்டங்கள் காடாகி வருகின்றன. இதனால் கொழுந்து வளர்ச்சியும் மிகவும் குறைவு. ஆயிரம் ரூபா சம்பளம் உயர்த்துவதற்கு முன் பெற்ற சம்பளம் இப்பொழுது பெற முடிவில்லை. என்று தொழிலாளர்கள் கூறுகின்றார்கள். அதேபோல நோயாளர்களை வைத்தியசாலக்கு கொண்டு செல்வதற்கு தோட்ட நிர்வாகங்கள் வாகனங்கள் வழங்குவதில்லை. கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளும் தற்பொழுது வழங்குவதில்லை. தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக வாழ்கின்றனர். எனவே கூட்டு ஒப்பந்தத்தில் கைசாத்திடும் தொழிற்சங்கங்கள் ஏனைய தொழிசங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு அனைத்து தொழிலாளர்களையும் இணைத்துக்கொண்டு ஒரு போராட்டம் நடத்தி தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றெடுக்க வேண்டும் என்றார்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com



supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# தமிழ்க் கட்சிகளின் புதிய வரைபு

## புதிய வரைபில் முதல் வரைபில் இருந்து சில வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றிற்குள் பின்னர் செல்வோம். இப்பொழுது அடுத்த பிரதான பிரச்சினைக்குள் வருவோம்.

### சமஷ்டி

முன்னைய வரைபிலும் புதிய வரைபிலும் சமஷ்டி இருக்கிறது.

### சமஷ்டி என்றால் என்ன?

இது மிகவும் ஆழமான விடயம். மிகச் சுருக்கமாக கூறுவதாயின்,

வழங்கப்பட்ட அதிகார எல்லைக்குள் மத்தியும் மாகாணமும் கிட்டத்தட்ட தனிநாடு மாதிரி. மத்திய அரசின் அதிகாரத்தில் மாகாண அரசு தலையிட முடியாது. மாகாண அரசின் அதிகாரத்தில் மத்திய அரசு தலையிட முடியாது.

### எங்களது பிரச்சினை

இன்று இருப்பது ஒற்றையாட்சி. மத்திய அரசில் ஒவ்வொரு தேர்தலிலும் நமக்கு சுமார் 20 பா உ க்கள் கிடைக்கிறார்கள். அதேபோன்று நான்கைந்து கபினட் அமைச்சர்கள் கிடைக்கிறார்கள். ( இம்முறை மட்டும் சற்று வித்தியாசம்). அதாவது மத்தியில் நமக்கு ஓரளவு பலம் இருக்கிறது. அப்படி இருந்தும் நமக்கு எத்தனையோ பிரச்சினை. இனவாத செயற்பாடுகள். அவற்றைத் தீர்த்துக்கொள்ளமுடியாமல் தவிக்கின்றோம். சோரம்போய்க்கூட எதையும் சாதிக்கமுடியவில்லை.

இந்நிலையில், இந்நாட்டில் எட்டு மாகாணங்களில் நாம் மிகவும் சிறுபான்மை. கிழக்கிலும் நாம் பெரும்பான்மையல்ல. ஆனாலும் சிறுபான்மையுமல்ல. கிழக்கை தற்காலிகமாக ஒரு புறம் வைத்துவிட்டு, ஏனைய எட்டு மாகாணங்களையும் எடுத்துக்கொண்டால், சில மாகாணங்களில் ஒரு மாகாணசபை உறுப்பினரைக்கூட பெற முடியாது. உ+ம், தெற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்கள்.

இந்நிலையில் மத்திய அரசும் தலையிடமுடியாத, கிட்டத்தட்ட தனிநாடுபோன்று செயற்படக்கூடிய சமஷ்டி முறையின்கீழ் பொலீஸ், காணி அதிகாரம் உட்பட முக்கிய அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கினால் அம்முஸ்லிம்களின் நிலையென்ன? தமக்கு வாக்களிக்கின்ற கண்டி மாவட்ட சிறுபான்மை முஸ்லிம்களின் நிலை என்ன? என்றுகூட சித்திக்கமுடியாத தலைமைத்துவங்களாக இவர்கள் இருந்தால் என்ன செய்வது?

தமிழர்கள் தனிநாட்டுக் கோரிகையை கைவிட்டு, அதற்குப்பதிலாக எதற்காக சமஷ்டி கேட்கிறார்கள். ஏனென்றால் சமஷ்டி என்பது, வெளிநாடுகளுடன் ஒரு தனிநாடுபோன்று செயற்பட முடியாதபோதும் உள்நாட்டைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட தனிநாடுதான். மத்திய அரசின் தலையீடு இருக்கக்கூடாது; என்பதற்காகத்தான் சமஷ்டி கேட்கிறார்கள்.

### சமஷ்டி என்பது எவ்வளவு பலமானது என்பது அவர்கள் அதனை அழுத்திக் கேட்பதிலேயே புரியவில்லையா?

ஒரு மத்திய அரசாங்கத்தின்கீழேய நாங்கள் படிப்படியாக உரிமைகளை இழந்து வருகின்றோம். பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். சமஷ்டியை வழங்கிவிட்டு மேலும் எட்டு அரசாங்கங்களினால் பிரச்சினைகளைச் சந்திக்கப்போகிறோமா? இந்த சமஷ்டியைத் தாருங்கள்; என்று நாமும் கையொப்பம் வைக்கப்போகின்றோமா?

கிழக்கை எடுத்துக்கொண்டால் முஸ்லிம்கள் தனித்து ஆட்சியைக்கமுடியுமா? ஒன்றில் தமிழர்களும் முஸ்லிம்களும், அல்லது முஸ்லிம்களும் சிங்களவர்களும் அல்லது தமிழர்களும் சிங்களவர்களும்.

மூன்றாவது நிகழ்ந்தால் நிலைமை என்ன? தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து ஓர் முஸ்லிம் முதலமைச்சரை நியமித்தும் ஒரு வீதிக்கு ( கடற்கரைப்பள்ளி வீதி) பெயர் மாற்றம் செய்யமுடியாமல் போனவர்கள் தானே நாம். காரணம் தமிழ்த்தரப்பு விரும்பவில்லை. சரி அதுவெல்லாம் போகட்டும்.

### உடன்பாடு ஏற்பட்டிருக்கிறதா?

தமிழ்த்தரப்பு இணைந்த வட கிழக்கைக் கோருகிறது. முஸ்லிம்கள் அதற்கு உடன்பாடில்லை. தமிழ், முஸ்லிம் கட்சிகள் இதுவரை கூடிப்பேசி, வட கிழக்குப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் பங்கு தொடர்பாக ஓர் உடன்பாட்டிற்கு வரமுடிந்ததா?

கடந்த 35 வருடங்களாக ( முஸ்லிம் கட்சி தோற்றம் பெற்று சுமார் 35 வருடம்) மறைந்த தலைவராலோ, இன்றிருக்கின்ற தலைவர்களாலோ, தமிழ்த்தலைவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரமுடியவில்லை. இன்னும் முரண்பாட்டு நிலையே இருக்கிறது. இந்நிலையில் எந்த வகையில் இணைந்து அதிகாரப்பகிர்வுக்காக கோரிக்கை விடுக்கிறீர்கள்.

புதிய வரைபில் தமிழ்பேசும் தேசியங்கள் 1948ம் ஆண்டிலிருந்து அதிகாரப்பகிர்வைக் கேட்கிறார்கள்; என்று இருக்கின்றது. அவ்வாறாயின் கூ ஆ ஒச்தூர், A M A Azeez. Dr Bathiudeen Mahmood, DR M C M Kaleel போன்றவர்களெல்லாம் அதிகாரப்பகிர்வு கேட்டார்களா? இலங்கை இந்திய ஒப்பந்தத்திலேயே முஸ்லிம்கள் கண்டுகொள்ளப்படாத தமிழர் போராட்டத்தை, எவ்வாறு தமிழ்முஸ்லிம் போராட்டமாக சித்தரிக்கப் பார்க்கிறார்கள்.

தென்கிழக்கில் கரையோர மாவட்டம்பெற தமிழ்த் தரப்பு எதிர்ப்பு.

அம்பாறையில் ஓர் முஸ்லிம் அரசாங்க அதிபரை நியமிக்க தமிழ்த்தரப்பு எதிர்ப்பு.

கிழக்கு மாகாணசபைக்கு ஒரு முஸ்லிம் ஆளுனரை நியமிக்க தமிழ்த்தரப்பு எதிர்ப்பு.

தமிழருக்கு யாழ்ப்பாணம்போல் இலங்கை முஸ்லிம்களின் மானசீகத் தலைநகராகப்போற்றும்

கல்முனையை கல்முனையாக விட்டுவைக்க தமிழ்த் தரப்பு எதிர்ப்பு. அதனைத் துண்டாடவேண்டும்.

கடற்கரைப்பள்ளி வீதியை பதிவுசெய்ய தமிழ்த்தரப்பு எதிர்ப்பு.

கோரளைப்பற்று மத்தி கிராம சேவகர் பிரிவுகள் சில எங்கேயோ இருக்கின்ற வாகரையுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அநியாயத்திற்கு தீர்வுகாண தமிழ்த் தரப்பு எதிர்ப்பு.

இவ்வாறு எழுதிக்கொண்டே போகலாம்.

இதில் எந்தவொரு பிரச்சினையைக்கூட தமிழ்த்தரப்புடன் பேசித்தீர்க்கமுடியாத முஸ்லிம் தலைமைத்தும்

அதிகாரப்பகிர்வில் முஸ்லிம்களின் பங்கு தொடர்பாக தமிழ்த்தரப்பு எந்தவொரு உடன்பாட்டிற்கும் வராத நிலையிலும் தமிழ்த்ரப்பின் அதிகாரப்பகிர்வு அபிலாசையை, தமிழ்முஸ்லிம்களின் அபிலாசையாக காட்டி கையொப்பம் வைக்க முயல்வதேன்? பின்னணி என்ன? என்ற கேள்வியில் என்ன தவறு இருக்கிறது?

### முஸ்லிம்கள் ஒருபோதும் அதிகாரப்பகிர்வு கேட்கமுடியாது.

முஸ்லிம் தலைமைகளும் மக்களும் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் முஸ்லிம்கள் ஒரு போதும் அதிகாரப்பகிர்வு கேட்கமுடியாது. முஸ்லிம்களுக்கு நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்கு அரசியலமைப்பினூடாக வேறுதீர்வுகளைத்தான் தேட வேண்டும்.

### ஏன் அதிகாரப்பகிர்வு கேட்கமுடியாது?

அதிகாரப்பகிர்வு கோருவதென்றால் அந்த அதிகாரத்தை செயற்படுத்த நிலப்பிராந்தியம் வேண்டும். சிங்களவர்களுக்கு ஏழு நிலப்பிராந்தியங்கள் ( மாகாணங்கள்) இருக்கின்றன. தமிழருக்கு ஒரு நிலப்பிராந்தியம் இருக்கிறது( வடக்கு). ஏன் தமிழர்கள் வடக்கு கிழக்கு இணைப்பைக் கோருகிறார்கள். ஏனெனில் கிழக்கைத் தமிழர்களாலும் தனித்து ஆழமுடியாது.

வட கிழக்கை இணைத்தால் அவர்களால் கிழக்கையும் ஆழமுடியும்.

தமிழ் முஸ்லிம் ஒற்றுமைபற்றிப் பேசுகின்றோமே, கிழக்கைத் தனியாக விட்டுவிடுவோம். தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து ஆளட்டும்; என்றாவது நினைக்கிறார்களா? கிழக்கையும் வடக்குடன் இணைத்து முஸ்லிம்களை சிறுபான்மையாக்கி முஸ்லிம்களையும் சேர்த்தல்லவா ஆள நினைக்கிறார்கள். இல்லையெனில் வட கிழக்கில் அதிகாரப்பகிர்வு தொடர்பாக இதுவரை ஒரு உடன்பாட்டிற்கு வந்திருப்பார்கள் அல்லவா? முஸ்லிம்களையும் சேர்த்துத்தானே 13 இன் கீழ் ஆரம்பத்தில் சில காலம் ஆட்சி செய்தார்கள்.

சுருங்கக்கூறின் தமிழர்கள் அதிகாரம் கேட்பது தம்மை அடுத்தவர் ஆளக்கூடாது. தம்மைத்தாமே ஆழவேண்டும்; என்பதற்காக.அதனால்தான் கல்முனையைக்கூட பிரித்துக் கேட்கிறார்கள். காரைதீவைப் பிரித்தார்கள். நாவிதன்வெளியைப் பிரித்தார்கள். ஆலையடிவேம்பைப் பிரித்தார்கள்.



**வை.எல்.எஸ்.ஹமீட்**
**(அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபக செயலாளர் நாயகமும், மறைந்த எம்.எச்.எம். அஷ்ரபின் இணைப்பு செயலாளரும்)**

முஸ்லிம்களின் பெரும்பான்மையின்கீழ் இருக்கின்ற ஒரு பிரதேச செயலகத்தின்கீழ்கூட தாம் இருப்பதற்கு அவர்கள் தயாரில்லை. நாங்கள் எந்தப்பிராந்தியத்தில் நம்மை நாம் ஆள அதிகாரம் கேட்கின்றோம்?

நாம் வெளிப்படையில் தமிழ்மொழி என்றும் எமக்குத் தேவைப்படும்போது தமிழ்பேசும் சமூகங்கள் என்றும் பேசிக்கொண்டாலும் சிங்கள நிர்வாகத்தின்கீழ் இருந்தாலும் இருப்போம்; ஆனால் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட ஒரு கிராமசேவகர்பிரிவில்கூட ஒரு முஸ்லிம் கிராமசேவகரின் நிர்வாகத்தின்கீழ் இருக்கமாட்டோம்; என்ற நிலைப்பாட்டில் தமிழ்தரப்பினர் இருக்கின்றனர். அதனால்தான் கல்முனையில் முஸ்லிம்களுக்கும் 29 கிராம சேவகர் பிரிவுகள், 1/3 பங்கு வாழும் தமிழருக்கும் 29 கிராம சேவகர் பிரிவுகள்.

நமக்கு பிராந்தியமும் இல்லை. அதிகாரம் கேட்கவுமுடியாது. நிலப்பிராந்தியம் இல்லாத நாம் எங்கு நம்மை நாம்ஆள்வதற்கு அதிகாரம் கேட்கின்றோம்?

எலி எண்ணைக்கு காய்கிறது. இன்னுமொன்று எதற்காக காய்கிறது? எனக்கேட்பார்கள். அதுபோல், நிலப்பிராந்தியம் உள்ள தமிழர்கள் தம்மைத் தாமே ஆள அதிகாரம் கேட்கிறார்கள். நிலப்பிராந்தியம் இல்லாத நாம் எதற்காக அதிகாரம் கேட்கிறோம்? நாம் மற்றவர்களால் ஆளப்படுவதற்காகவா அதிகாரம் கேட்கிறோம்? ஏன் இந்த தலைமைகளுக்கு இது புரியாமல் இருக்கிறது.

### மறைந்த தலைவர் அதிகாரப்பகிர்வு கேட்டாரா?

மறைந்த தலைவர் ஒருபோதும் அதிகாரப்பகிர்வு கேட்கவுமில்லை. தனி அலகு கேட்கவுமில்லை. ஆனால் அதிகாரப் பகிர்வும் கேட்டார்; தனி அலகும் கேட்டார். இங்குதான் சூட்சுமம் இருக்கிறது. இதனைப் புரிந்துகொண்டால் அதிகாரப்பகிர்வில் முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாக குழப்பம் வராது.

தலைவராக ஒருபோதும் அதிகாரப்பகிர்வு கேட்கவில்லை. அதிகாரப்பகிர்வு இடம்பெறத்தான்போகிறது; வட கிழக்கை இணைத்து அதிகாரப்பகிர்வு இடம்பெற்றுவிட்டது என்ற சூழ்நிலைகளில்தான் தனித்துவக்கட்சியை உருவாக்கி அதிகாரப்பகிர்வும் தனி அலகும் கேட்டார்.

நன்றாக சிந்தித்துப் பாருங்கள். வட கிழக்கு ஒரு போதும் பிரியாது; என்ற தோற்றப்பாடு இருந்த காலமது. வட கிழக்கைப் பிரிக்க சர்வஜன வாக்கெடுப்பிற்கு உடன்பட்டு முஸ்லிம்களை புலிகளிடம் கொத்துக் கொத்தாக பலிகொடுக்க முடியாது; என்ற சூழ்நிலை இருந்த காலமது.

எனவே, தலைவர் சொன்னார்: வட கிழக்கை இணைத்த நீங்களே பிரியுங்கள். வட கிழக்கு இணைந்திருக்க வேண்டுமாயின் தனி அலகு தாருங்கள்; என்றார்.

ஆரம்பத்தில், வட கிழக்கிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களைத் தென்கிழக்குடன் இணைத்துக் கேட்டார். அது சாத்தியமில்லையெனத்தெரிந்த போது,

கிழக்கிலுள்ள பிரதேசங்களை இணைத்துக் கேட்டார்.

அதுவும் சாத்தியமில்லை; என்றபோது தென்கிழக்கைக் கேட்டார்.

அதுமட்டுமல்லாமல், தொண்டாஅஷ்ரப் ஒப்பந்தத்தினூடாக வட கிழக்கில் ஓர் உப அலகைக் கேட்டார்.

இதெல்லாம் ஏன்? இப்பொழுது யாராவது, தலைவர் தொண்டா அஷ்ரப் ஒப்பந்தத்தில் உப அலகுதான் கேட்டார். எனவே, நாமும் உப அலகு கேட்போம்; எனக்கூறமுடியுமா?

அன்று, முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு, வட கிழக்கு இணைக்கப்பட்டு, அதிகாரப்பகிர்வு அமுலுக்கு வந்த நிலையில் something is better than nothing என்ற கோரிக்கைகள் அவை.

அதாவது, 'வெந்த சூட்டில் பிடுங்கியது லாபம்' என்பார்கள். அதற்காக, யாரும் வீட்டிற்கு தீ வைத்துவிட்டு அதன்பின் வீட்டிற்குள் இருப்பவற்றை முடிந்த அளவு காப்பாற்றுவோம் என முனைவதில்லை.

மறைந்த தலைவர், நமது சக்திகளுக்கு அப்பால் வீடு தீப்பற்றி எரிந்தபோது அந்த வீட்டிற்குள் இருந்து எதையாவது காப்பாற்றிவிட முனைந்தார். அதுதான் அவர் கேட்ட அதிகாரப்பகிர்வும் வெவ்வேறு விதமான தனி அலகுகளும்.

இன்றைய தலைமைகள் முதலில் வீட்டிற்கு தீவைத்துவிடுவோம். பிறகு, வீட்டிற்குள் இருக்கும் எதையாவது காப்பாற்ற முடியுமா? என யோசிப்போம்; என்பதுபோல் செயற்படுகிறார்கள்.

இறுதியாக,

உண்மையில் தமிழ்த்தலைமைகள் 35 வருடங்களாக அவர்களால் முடியாமல் போனதை இன்றைய இனவாத அரசியல் சூழலைப் பயன்படுத்தி தமிழ் முஸ்லிம் ஒற்றுமை என்ற பெயரில் சாதிக்க முனைந்து வெற்றியின் விளிம்பிற்கு வந்துவிட்டார்கள்.

அதுதான், வட கிழக்கு இணைப்பு, சமஷ்டி ஆட்சி என்பவற்றில் முஸ்லிம் தரப்புடன் ஒரு உடன்பாட்டிற்கு வரமுடியாமல், இன்னும் தெளிவாகச் சொன்னால் வரவிருப்பமில்லாமல் இருந்தவர்கள்,

இன்று எந்த உடன்பாடும் இல்லாமல், அதிகாரப்பகிர்வில் முஸ்லிம்களின் பங்கு எதுவென்றே கூறாமல் முஸ்லிம் தலைமைகளின் சம்மதத்தை எழுத்துமூலமாகப்பெற்று அதனை இந்தியப் பிரதமருக்கே அனுப்பி அதனை ஒரு வலராற்று ஆவணமாக மாற்றும் நிலைக்கே வந்துவிட்டார்களே! இது தமிழ்த் தலைவர்களின் சாதனை இல்லையா?

இதற்கு துணைபோகத்துடிக்கும் நம் தலைமைத்துவத்திற்கு நோபல் பரிசே வழங்கலாம்.

முஸ்லிம் தலைமைகளே! புரிந்துகொள்ளுங்கள்.

இதுவரை சமுதாயத்திற்காக நீங்கள் எதுவும்சாதித்ததில்லை. சமுதாயத்திற்கு அநியாயமாவது செய்யாமல் இருங்கள். நாளை நீங்கள் மரணித்தன்பின் இன்று சஹ்ரானை சமூகம் திட்டுவதுபோல் எதிர்கால சந்ததி உங்களைத் திட்டும் நிலையை ஏற்படுத்திவிடாதீர்கள்.

முடிந்தால் தமிழ்தலைமைகளுடன் பேசி வட கிழக்கு இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் பங்கு தொடர்பாக ஓர் திருப்திகரமான உடன்பாட்டுக்கு வரமுடியுமா? எனப்பாருங்கள்.

அதிகாரப்பகிர்வு என்பது அடிப்படையிலேயே, நம்மை நாம் ஆள்வதற்கு நிலப்பிராந்தியம் இல்லாத நமக்கு பாதிப்பானது. அதேநேரம், தமிழ்மக்களின் நீண்டகால அபிலாசைகளுக்கு நாம் குறுக்கே நிற்கவும் விரும்பவில்லை. அதற்காக எங்களை நாங்களே கடலுக்குள் தள்ளிவிடவும் விரும்பவில்லை. இந்நிலையில் முடிந்தளவு இரு தரப்பிற்கும் பாதிப்பில்லாத வகையில் ஒரு உடன்பாட்டைக் காணமுயலுங்கள். அதனைப் பகிரங்கப்படுத்தி சமூகத்தின் சம்மதத்தைப் பெறுங்கள்.

அதன்பின் அதிகாரப்பகிர்வு தொடர்பாக கூட்டாக கோரிக்கை விடுப்பதைப்பற்றி யோசிக்கலாம். அதற்குமுன், கல்முனை விவகாரம், கோரளைப்பற்று மத்தி வாகரை விவகாரம், மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் காலத்தில் கையகப்படுத்தப்பட்டு, இன்னும் தமிழர்கள் விவசாயம் செய்து அனுபவிக்கும் சுமார் பத்துக்கும் பதினைந்து ஆயிரம் ஏக்கரிற்கும் இடைப்பட்ட மட்டு முஸ்லிம்களின் காணிகள் விடுவிப்பு போன்ற தமிழர்களுடன் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாக பேசி ஒரு நல்ல நிலைப்பாட்டிற்கு வாருங்கள்.

தமிழ்முஸ்லிம் ஒற்றுமை அவசியம். அதற்காக, நீயும் நானும் ஒற்றுமையாக இருப்போம்; உன் கண்ணைத் தா! எனக்கேட்டால் யாராவது கொடுப்பார்களா? ஆனால் நீங்கள் சமூகத்தின் கண்ணையே தர கையெழுத்திடுகிறேன். கையெழுத்திடவேண்டிய இடத்தைக் காட்டுங்கள்; என்கிறீர்களே! அதுதான் கவலை.

போதும் என நினைக்கிறேன், நீங்கள் புரிந்துகொள்வதற்கு.



# சுனாமி நினைவு தின பிரார்த்தனைகளும், ஆராதனை நிகழ்வுகளும்






(நூருள் ஹுதா உமர்)

உலகை உலுக்கிய அனர்த்தங்கள் பல இருக்கிறது. அதில் சுனாமி அலையின் தாக்கம் தசாப்தங்கள் பல கடந்தும் அழியா நினைவுகள் கொண்டது. அந்த சுனாமியலையில் சிக்கி எமது நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டது. அதில் அம்பாறை மாவட்டத்தின் பாதிப்பு மிக அதிகம். உயிர்கள், உடமைகள், சொத்துக்கள் என பலதையும் இழந்து நின்ற மக்கள் தமது துயரநாளின் 1% வருடங்கள் கடந்துள்ளதை எண்ணி துஆ பிராத்தனைகள், நினைவஞ்சலிகள் நாடுமுழுவதிலும் நடந்து வருகிறது.

அதன் ஒரு அங்கமாக மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த துஆ பிராத்தனை மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் கலாச்சார மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம். இம்தியாஸ் இந் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் குரான் ஓதி தமாம் செய்யப்பட்டதுடன் அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் முன்னாள் பிரதம இமாம் மௌலவி ஏ.ஆர்.எம். சப்ராஸ் (ஷர்கி) துஆ பிராத்தனை செய்தார். நினைவுரையை மௌலவி எம்.எஸ். இஹ்ஸான் (வாரி) நிகழ்த்தியதுடன். இந்நிகழ்வில் மாளிகைக்காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம், அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், அல்-பலாஹ் குரான் மதரஸா நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்கள், ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள், சமூக பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

காரைதீவு பிரதேச நினைவு தின நிகழ்வுகள் காரைதீவு கடற்கரையில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபி முன்றலில் இந்துமத வழிபாடுகளுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி. ஜெயசிரில், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் கே. குமாரசரி, காரைதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், ஆலய நிர்வாகிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அல்- மீஸான் பௌண்டசன், ஸ்ரீலங்கா. ஏற்பாடு செய்த நினைவுதின நிகழ்வுகள் சாய்ந்தருதில் அமைப்பின் தவிசாளரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துஆ பிராத்தனை இடம்பெற்றதுடன் நினைவுரையும் இடம்பெற்றது.

# மட்டக்களப்பில் கிராமத்திற்குள் புகுந்த இராட்சத முதலை - பீதியில் மக்கள்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிர்காமர் வீதி கிராமத்திற்குள் புகுந்த முதலையொன்றை பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (25) அதிகாலை 4.30 மணியளவில் மட்டிக்களி - கதிர்காமர் வீதியில் உலாவிய குறித்த முதலையை கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து குறித்த இடத்திற்கு வருகை தந்த கல்லடி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த முதலையை பாதுகாப்பாக மீட்டு செங்கலடி கறுத்தப் பாலத்திற்கு அருகாமையிலுள்ள குளம் ஒன்றில் விடுவித்ததாக திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.




சுமார் 0% அடி நீளத்தினைக்கொண்ட குறித்த முதலை குறித்த கிராமத்திற்கு அருகாமையிலுள்ள தோனா (நீர்நிலை) பகுதியில் இருந்து வந்திருக்கலாமென அப்பகுதி மக்கள் தெரிவித்ததுடன், அப்பகுதியை சேர்ந்த பெருமளவிலான மக்கள் அதனை பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்ததுடன், அப்பகுதியில் அச்சநிலையும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை குறிக்கும் கிறிஸ்மஸ் பண்டிகையின் நள்ளிரவு ஆராதனை!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை குறிக்கும் கிறிஸ்மஸ் பண்டிகையின் நள்ளிரவு ஆராதனைகள் நேற்று முன்தினம் (25) நள்ளிரவு நாடெங்கிலும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பாலன் பிறப்பினை குறிக்கும் வகையில் தேவபெண்களினால் பாலகன் கொண்டு வரப்பட்டு ஆயரிடம் வழங்கி அதனை தொழுவத்தில் வைத்து பாலன் பிறப்பு நினைவுகூரப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கிறிஸ்மஸ் பண்டிகைக்கான வழிபாடுகள் ஆயரினால் முன்னெடுக்கப்பட்டதுடன் பக்தர்களுக்கு அருள்ஆசி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இதன்போது கிறிஸ்மஸ் பண்டிகைக்கான விசேட திருப்பலியானது சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியவாறாக ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் நாட்டிலிருந்து கொரோனா நிலை நீங்கவேண்டுமெனவும், நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கவும் பிரார்த்திக்கப்பட்டதுடன், கரோல் கீதமும் இசைக்கப்பட்டது.

அதேவேளை மாவட்டத்திலுள்ள ஏனைய தேவாலயங்களிலும் விசேட நத்தார் ஆராதனைகள் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மண்முனை தென்மேற்கு பிரதேச இலக்கிய விழா - 2021




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கலாசார அலுவல்கள் திணைக்களம், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசார அதிகார சபை இணைந்து நடாத்திய பிரதேச இலக்கிய விழா - 2021 கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் வெகுவிமர்சையாக இடம்பெற்றுள்ளது.

''அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களை கொண்ட புனித தேசத்தினை ஒன்று சேர்ந்து கட்டியெழுப்புவோம்'' எனும் தொனிப்பொருளிற்கு அமைவாக பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி.தட்சணகௌரி தினேஸ் தலைமையில இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்.

இதன்போது பிரதேச மட்ட இலக்கிய போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு இடம்பெற்றதுடன், புதிய மழை எழுத்தாளர் கௌரவமும் இதன்போது இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் முத்தமிழ் பிரதேச இலக்கிய விழாவும் "தேனகம் சிறப்பு மலர்" வெளியீடும்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)




மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் முத்தமிழ் பிரதேச இலக்கிய விழா மற்றும் ''தேனகம் சிறப்பு மலர்'' வெளியீட்டு நிகழ்வும் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவையும் பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து நடாத்தும் முத்தமிழ், பிரதேச இலக்கிய விழா மற்றும் ''தேனகம் சிறப்பு மலர்'' வெளீயீட்டு நிகழ்வு பிரதேச செயலாளரும் கலாசார பேரவை மற்றும் பிரதேச கலாசார அதிகார சபையின் தலைவருமான வி.வாசுதேவன் அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெற்றது.

முத்தமிழ் பிரதேச இலக்கிய விழா நிகழ்வானது மங்கள விளக்கேற்றலுடன் தமிழத்தாய் பாடல் இசைக்கப்பட்டு கலாசார கீதத்துடன் ஆரம்பமானது, நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.லட்சண்யா பிரசந்தனின் வரவேற்புரையுடன் கலை இலக்கிய கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவையும் பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்திய இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், கலைஞர்கள் கௌரவிப்பு இதன்போது இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் அதிதிகளாக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி திருமதி.கெனடி பாரதி , கலைஞர் செல்லையா ஞானபிரகாசம் கலாபூஷணம் சண்முகம் வைரமுத்து உட்பட எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கலாசார உத்தியோகத்தர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# இளைஞர் அணியின் ஏற்பாட்டில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிரமதானம்




(த.சுபேசன்)

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தென்மராட்சி இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில் 25/12 சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இளைஞர் அணித் தலைவர் செ.கஜந்தன் தலைமையில் இடம்பெற்ற இச் சிரமதான நிகழ்வில் வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் திருமதி டயாழினி,அங்கஜன் இராமநாதனின் தென்மராட்சி இளைஞர் மற்றும் மகளிர் அணியினர் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட்டதனால் ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளரது பதவிகள் பறிபோனது

(ஏ.எல்.றியாஸ்)



ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் ரெபுபாசத்தினை கட்சியிலிருந்தும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நீக்கியுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.எல். ரெபுபாசம், பட்டியல் ஆசனத்தினூடாக ஏறாவூர் நகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

ஏறாவூர் நகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அவர், நகர சபை தவிசாளர் தெரிவின் போது கட்சியினுடைய தீர்மானத்தினை புறக்கனித்தும், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டதனால், சுதந்திரக்கட்சி அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டது.

மேற்படி ஒழுக்காற்று விசாரணைகளின் தீர்ப்பினையடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு, அவரது கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்து கட்சியில் இருந்தும் வெளியேற்றியுள்ளது.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் மற்றுமொரு உறுப்பினரான எம்.எஸ்.எம்.ஜஃபர் என்பவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட்டதனால், அக்கட்சி அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, அவரது உறுப்புரிமையையும் இரத்துச்செய்து கட்சியில் இருந்து வெளியேற்றியுள்ளது.

இதற்கினங்க, ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச சபை ஆகியவற்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்குறித்த உறுப்பினர்களின் பதவிகள் நீக்கப்பட்டமை குறித்து, அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.




# கிண்ணியாவில் சுனாமி ஆழிப்பேரலையின் 17 ஆவது தின ஞாபகார்த்த நிகழ்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா பிரதேச செயலகமும் அல் ஹிதாயா மீனவர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த சுனாமி ஞாபகார்த்த நிகழ்வு நேற்று (26) காலை தோனா கடற்கரை மீனவர் சங்க கட்டிட வளாகத்தில் இடம் பெற்றது.17 ஆவது வருட ஆழிப்பேரலை இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் மற்றும் இராணுவ பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சுனாமி ஆழிப்பேரலையின் போது உயிர் நீத்த உறவுகளுக்காக மௌன அஞ்சலியும் இடம் பெற்றது. இதன் போது பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், குர்ஆன் பிரதிகளும் வழங்கப்பட்டன. ஆழிப்பேரலை நினைவாக மரநடுகையும் மீனவர் சங்க கட்டிட வளாகத்தில் இடம் பெற்றது.

கிண்ணியா கடலூர் முருகன் கோயிலும் சுனாமி ஆழிப்பேரலை நிகழ்வு உணர்வு பூர்வமாக கோயில் வளாகத்தில் இடம் பெற்றது. கோபால சிங்கம் புகிந்தன் சர்மா குருக்கள் விசேட பூஜை வழிபாடுகளை நடாத்தினர். பொது மக்கள் இணைந்து கோயிலுக்கு முன்னால் உள்ள கடலில் மலர் தூவி தங்களது அஞ்சலியினை கண்ணீர் மல்க செலுத்தினர்.

# திருகோணமலையில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு : விடுமுறை கால சுகாதார நடைமுறை கேள்விக்குறியா?

## புத்திஜீவிகள் கேள்வி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

இலங்கையின் சுற்றுலா பிரதேசங்களில் ஒன்றான திருகோணமலையில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி அடைந்து வந்துள்ள நிலையில் இம்மாதம் விடுமுறை காலங்களைகழிப்பதற்காக திருகோணமலைக்கு உள்ளூர் சுற்றுலா பயணிகள் வருகை தருவதை எம்மால் அவதானிக்க கூடியதாக இருந்தது

திருகோணமலையில் நகர் மற்றும் திருகோணமலை நகரைஅண்டிய கோனேஸ்வரம் கோவில் பிரதேசம், திருகோணமலை கடற்கரை பிரதேசம் மற்றும் நிலாவெளி கடற்கரை பிரதேசம் என பல பிரதேசங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படுகின்றது

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றானது மேலும் அதிகரித்து வருகின்ற நிலையில் இவ்வாறு சுற்றுலாப் பயணிகளின் வருகையானது எதிர்காலத்தில் நாட்டிற்கு பெரும் சவாலாக இருக்கும் எனவும் திருகோணமலை நகர் மற்றும் நகரை அண்டிய பிரதேசங்களில் சுற்றுலா விடுதிகள் பெரும்பாலானவை முன் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நகரில் உணவகங்கள் மற்றும் நகரை அண்டிய வர்த்தக நிலையங்களில் மக்கள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும் நகரின் பெரும்பாலான வீதிகள் வாகன நெரிசல் ஏற்றப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சினால் விடுமுறை காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறைகள் சரியாக சுற்றுலா பிரதேசங்களில் நடைமுறை படுத்தப்பட்டு பின்பற்ற படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே இருப்பதாகவும் புத்திஜீவிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்





எனவே திருகோணமலை மாவட்டத்தில் நகரசபை, பிரதேச சபை, சுகாதார திணைக்களம், பாதுகாப்பு படை மற்றும் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் கொரோனா தொற்று உச்சமடையாமலும் நாட்டில் புதிதாக அடையாளம் காணப்பட்ட ஓமிக்ரோன் தொற்றிலிருந்தும் எம் மாவட்டத்தை பாதுகாத்துக் கொள்ளுமாறும் புத்திஜீவிகள் வேண்டுகொள் வி டு க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.பகுறுதீனின் சிரேஷ்ட புதல்வி காலமானார்

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்ட பிராந்திய சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.பகுறுதீனின் சிரேஷ்ட புதல்வி பி.நுஸ்றா நேற்று(26) காலமானார். சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்று காலை இறையடி எய்திய இவரின் ஜனாஸா நேற்றிரவு இஷா தொழுகையினைத் தொடர்ந்து தைக்காநகர் முஸ்லிம் பொது மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நாற்பது வயதுடைய மர்ஹூம் பி.நுஸ்றா மூன்று பிள்ளைகளின் அன்புத்தாயாவார்.

இவர் அக்கரைப்பற்றில் உள்ள ஏ.எஸ்.ஆர்.எம் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.எம்.முசாதிக் என்பவரின் மனைவியுமாவார்.

இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் ஒரு ஆண் குழந்தைக்கு தாயாரான மர்ஹூம் பி.நுஸ்றா, சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.பகுறுதீனின் மூன்று பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் மூத்த புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் வரிசையில் காத்திருந்து சமையல் எரிவாயு கோள்வனவு :

## பலர் சமையல் எரிவாயு இன்றி வீடு திரும்பினர்





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் தொடர்ந்து நிலவி வரும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவி வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்

இந்நிலையில் நேற்று (26) பகல் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்ட சமையல் எரிவாயு கொள்கலன்கள் திருகோணமலை விநியோகஸ்தரின் களஞ்சியசாலையில் வைத்து பாவனையாளர்களுக்கு விற்பனை செய்ததை எம்மால் காணக் கூடியதாக இருந்தது

மேலும் இவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட சமையல் எரிவாயு பல சிரமத்திற்கு மத்தியில் பலர் காத்திருந்து கொள்வனவு செய்ததாகவும் இவ்வாறு வருகை தந்த சமையல் எரிவாயு குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரமே வழங்க போதுமானதாக இருந்ததாகவும் பலர் சமையல் எரிவாயு கொள்கலன் கொள்வனவு செய்ய முடியாமல் வீடு திரும்பியதும் எம்மால் அவதானிக்க கூடியதாக இருந்தது

இவ்வாறு இருக்கையில் சந்தையில் போதுமான சமயல் எரிவாயு கிடைப்பதில்லை எனவும் தொடந்து சமையல் எரிவாயு தட்டுப்பாடு நீடிப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கிவைப்பு...



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலையின் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கரடிப்பூவல் கிராமத்தில் உள்ள திருவள்ளுவர் பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கிவைப்பு

நேற்று முன்தினம் (25) திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபை கௌரவ உப-தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களினால் பலர் பாடசாலையின் நிர்வாகத்தினரிடம் இவ் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டது

திருவள்ளுவர் பாலர் பாடசாலையின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றார்களினால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப-தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களிடம் எழுத்து மூலமான கோரிக்கை விடுத்ததினை அடுத்து இவ் தளபாடங்கள் வழங்கிவைக்கப்பட்டது

இந்நிகழ்வில் பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள் நிர்வாகிகள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# கல்லடியில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வு



2004ம் ஆண்டு நிகழ்ந்த சுனாமி பேரலையின் நிகழ்வுகள் 26.12.2021 அன்று உலகம் பூராகவும் நேற்று நினைவு கூறப்படுகின்றன. அதனையோட்டி மட்டக்களப்பு கடல் மீன்கள் விளையாட்டு கழகம் சுனாமி நினைவேந்தலை கல்லடியில் அமைந்துள்ள சுனாமி நினைவு திடலில் 26.12.2021 நேற்று நடாத்தியது.

கடல் மீன்கள் விளையாட்டு கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் அனுசரனையில் 15 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 250 வறிய மாணாக்கர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வணபிதா ஜோசப்மேரி அடிகளார் அவர்களும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் ந.வாசுதேவன் அவர்களும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகான பணிப்பாளர் எந்திரி க..பரதன் அவர்களும், மட்டக்களப்பு பிரதி கல்விப்பணிப்பாளர் (பொது முகாமைத்துவம்) திரு.ஹரிஹரராஜ் அவர்களும், கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் செயலாளர் சா.அருள்மொழி அவர்களும், மீன் பிடி சங்க தலைவர் அவர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். இதற்கான நிதியினை கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் மூத்த உறுப்பினரான இங்கிலாந்தில் புலம்பெயர்ந்து வாழும் புவனசிங்கம் வசீகரன் அவர்களால் வழங்கி வைக்கபப்ட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# சுனாமி பேபி அவரது இல்லத்தில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி



(ரக்ஸனா)

சுனாமி தாக்கத்தினால் கிழக்கு மாகாணமே மிகவும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2004.12.26 நேற்று சுனாமியால் காணாமல்போய் பின்னர் வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட அபிலாஷ் என்ற ஆண் குழந்தை ஒன்றுக்கு அப்போது 9 தாய்மார்கள் உரிமை கொண்டாடியிருந்தனர். அபிலாஷை அப்போதிருந்து சுனாமி பேபி என்றே அழைக்கப்பட்டு வரப்படுகின்றது. பின்னர் மரபணுப்பணு பரிசோதனை மூலம் மட்டக்களப்பு குருக்கள்மடத்தைச் சேர்ந்த ஜெயராசா தம்பதியினரது என உறுதிப்படுத்தப்பட்டு பின்னர் அக்குழந்தை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்த அபிலாஷிக்கு 1% வயது. அபிலாஷ் தனது இல்லத்தில் வைத்துள்ள சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தூபில் இன்று பெற்றோர் உறவினர்களுடன் இணைந்து சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி அஞ்சலி செலு த்தினார். சுனாமி அனர்த்ததினால் உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும் தாம் இந்த நேரத்தில் அஞ்சலி செலுத்துவதாக அபிலாஷ் தெரிவித்தார்.

இதன்போது அவரது இல்லத்திற்கு வருகை தந்திருந்த வடகிழக்கு ஒப்பனையாளர் சங்கத்தினால் சுனாமி பேபி அபிலாஷின் கல்விச் செலவுக்காக ஒருதொகை நிதியுதவியையும் வழக்கி வைத்தனர்.

# களுவாஞ்சிகுடி கடற்கரையில் நடைபெற்ற சுனாமி ஞாபகார்த்த நிகழ்வு

(ரக்ஸனா)

சுனாமி தாக்கமுற்று இன்று 17 வது ஆண்டு நினைவு நிகழ்வுகள் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் மட்டக்களப்பு



மவாட்டத்தின் களுவாஞ்சிகுடி கடற்கரையில் அமையப்பெற்றுள்ள சுனாமி நினைவுத் தூபியில் சுடனாமியினால் உயிரிழந்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (26.12.2021) அஞ்சலி செலுத்தப்பட்டன.

களுவாஞ்சிகுடி இளைஞர் முன்னேற்ற விளையாட்டுக்கழகத்தின் ஏற்பட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், சுனாமியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், மண்முனை தென்எருவிப் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ், களுவாஞ்சிகுடி மாணிக்கப் பிள்ளையார் ஆலய குருக்கள் மு.அங்குசசர்மா, உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.



இதன்போது களுவாஞ்சிகுடி கடற்கரையில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கம் செய்து உயிரிழந்தவர்களை நினைவு கூரப்பட்டன.

# சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் நினைவாக கல்முனை கடற்கரை பள்ளிவாசலில் விஷேட பிரார்த்தனை

( எம் .என் .எம் .அப்ராஸ் )





சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் 17 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

சுனாமி அனர்த்ததினால் உயிரிழந்தவர்களின் நினைவாக கல்முனை கடற்கரை பள்ளிவாசலில் விஷேட துஆ பிராத்தனையொன்று இடம்பெற்றது .

நாட்டில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை ஆழிப்பேரலை (சுனாமி) அனர்த்ததினால் உயிரிழந்தவர்களின் 17வது ஆண்டு நினைவாக அம்பாறை மாவட்டம் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்கா ஷரிப் நிர்வாக சபை இணைந்து ஏற்பாடு செய்த கத்தமுல் குர்ஆன் ஓதப்பட்டு,விஷேட துஆ பிராத்தனையும் கல்முனை கடற்கரை பள்ளிவாசலில் நேற்று (26 -12-2021) காலை இடம்பெற்றது.

இதில் உலமாக்கள் , பள்ளிவாசல் நிர்வாக்தினர்கள் ,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர் .

கடந்த 2004 ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தினால் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பகுதி அதிகமான உயிரிழப்புக்களையும், சேதங்களை சந்தித்த பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று முழுமையா நீங்க வேண்டியும் துஆ பிராத்தனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நாவிதன்வெளியில் சிறப்பாக இடம்பெற்ற ஆங்கில பண்டிகை!









(காரைதீவு குறூப் நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கல்வியமைச்சின் வேலைத் திட்டத்தின்கீழ் நாவிதன்வெளி அன்னமலை தேசிய பாடசாலையில் ஆங்கில பண்டிகை(உணஞ்டூ டிண்ட ஊனுண்ணுடிதிச்டூ) அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதமஅதிதியாக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப்பணிப்பாளரும் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார். கௌரவஅதிதியாக வலய ஆங்கிலபாட ஆசிரியஆலோசகர் பி.குணரத்ன கலந்து சிறப்பித்தார்.

முன்னதாக மாணவர்களின் கொவிட்19 சித்திரப்போட்டியில் வெற்றிபெற்ற ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றை அதிதிகள் பார்வையிட்டனர்.

பின்னர் ஒன்றுகூடல் மண்டபத்தில் பிரதி அதிபர் நிலந்தினி ரவிச்சந்திரனின் நெறியாள்கையில் ஆங்கிலப்பண்டிகை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றன. ஆங்கிலப்பண்டிகையையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற 72மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உபஅதிபர் என்..வன்னியசிங்கம் சிரேஸ்ட ஆசிரியர் கே.கோடீஸ்வரன் உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# சேருவில பிரதேச சபைக்குட்பட்ட சிறுவர் பூங்காவனம் கவனிப்பாரற்ற நிலையினால் அடர்த்தியான பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுவதாக மக்கள் விசனம்

எப்.முபாரக்



திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பிரதேச சபைக்குட்பட்ட சிறுவர் பூங்காவனம் கவனிப்பாரற்ற நிலையினால் அடர்த்தியான பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுகின்றது.

இதனால் சிறுவர்கள் மாலை வேளைகளில் விளையாட முடியாத நிலையிலுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கொவிட் தாக்கம் காரணமாக வருடக்கணக்கில் மூடப்பட்டதால் புற்புதிகள் மற்றும் பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுவதால் செல்ல முடியாத நிலையிலுள்ளது.

சேருவில பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் இப் சிறுவர் பூங்கா வனம் இன்னமும் திறக்கப்படாது இருப்பதால் அங்குள்ள பெறுமதியான சிறுவர்கள் ஏறி விளையாடக்கூடிய பொருட்கள் துருப்பிடித்து பயன்படுத்த முடியாத நிலையை அடைவதற்கு முன்னர் பாரிய சிரமதானங்ள் மூலம் துப்பரவு செய்யப்பட்டு அப்பகுதி சிரார்கள் விளையாடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

சேருவில பிரதேசத்தினை அண்டிய தோப்பூர் மற்றும் வெருகல் போன்ற பகுதிகளில் சிறுவர் பூங்காக்கள் இல்லாது காணப்படுகின்றது, சேருவிலவில் சிறுவர் பூங்கா இருந்தும் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# காரைதீவு பிரதேசசபையின் மகஜர் செயலாளரிடம் கையளிப்பு!



( வி.ரி.சகாதேவராஜா)

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் செயலாளர் டபிள்யு.எம்.எம்.பி.வீரசேகரவிடம், கொழும்பு மத்துகம குக்குலேகங்க லாயா லெய்சர் நட்சத்திரவிடுதியில் காரைதீவு பிரதேசசபையின் தேவைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் அடங்கிய அமைச்சருக்கான மகஜரை, காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கையளித்தபோது....

# சுனாமி தாக்கத்தின் 17 வது நினைவு தினம் மட்டு. ஓந்தாச்சிமடத்தில் கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக அனுஸ்டிப்பு





(ரக்ஸனா)

ஆழிப்பேரலை சுனாமி தாக்கம் ஏற்பட்டு இன்றுடன் 1% ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை நினைவு கூர்ந்து மட்டக்களப்பு மாவட்;டத்தில் கொரோனா சுகாதார நடைமுறைகளைப பேணி பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன

இம்மாவட்டத்தில் சமார் 1800 பேரை பலிகொண்ட நாவலடி, டச்பார், புதுமுத்துவாரம், திருச்செந்தூர் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளில் மெழுகுதிரி ஏற்றி சமய வழிபாடுகள் இடம்பெற்றன.

சுனாமி தாக்கத்தில் உறவுகளை இழந்தவர்கள் கண்ணீர் மல்க உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையில் சுனாமித் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட நான்காவது மாவட்;டம் மட்டக்களப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இம்மாவட்டத்தில் சுனாமித் தாக்கத்தால் 2800க்கும் அதிகமானோர் பலியானதுடன் 650 பேர் காயமடைந்ததுடன் பலர் காணாமல் போனதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஓந்தாச்சிமடம் கிராமத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவத் தூபியில் உயிரிழந்தவர்களுக்கு சுடர் ஏற்றி, மலர்தூபி உறவினர்கள் அஞ்சலி தெலுத்தினர். இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைத் தவிசாளர் ஞா.யோகநாதன், பிரதேச சபை உறுப்பினர் சற்குணம், உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# சாவகச்சேரியில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம்

(த.சுபேசன்)



சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் பொலிஸாரின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நடத்தப்படுகிறது.அந்தவகையில் கோவிற்குடியிருப்பு-ஜே/301 கிராம அலுவலர் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் 24/12 வெள்ளிக்கிழமை பிற்பகல் மகிழங்கேணி- திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. கிராம அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன கலந்துகொண்டு பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் கல்வி நடவடிக்கை ஆகிய விடயங்களில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தார். மேலும் குறித்த நிகழ்வில் கோவிற்குடியிருப்பு கிராம சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவரும்-நகரசபை உறுப்பினருமான க.தர்சன், நகரசபை உறுப்பினர் பவுலினா ,பிரதேச செயலக கிராம மட்ட உத்தியோகத்தர்கள், கிராமத்தின் சிவில் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# பிள்ளையார் சிலைக்கு மேல், புத்தர் சிலை கலவரம் தோடங்க முதல் புத்தர் சிலை அகற்றப்பட்டது

(பைஷல் இஸ்மாயில், மட்டு. துஷாரா)



திருகோணமலை - மூதூர் 64 ஆம் கட்டை மலையடி பிள்ளையார் ஆலயத்தில் உள்ள பிள்ளையார் சிலைக்கு மேல், புத்தர் சிலையொன்று இனந்தெரியாதவர்களினால் வைக்கப்பட்டதை அடுத்து குறித்த பகுதியில் சற்று பதற்றநிலை தோன்றியது.

இந்து ஆலயத்தில் இனந்தெரியாத விசமிகளால் நேற்று முன்தினம் இரவு புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று (26) மூதூர் பிரதேச இந்துக் குருமார்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதற்கு முன்னர் வைக்கப்பட்ட சிலையை மூதூர் காவல்துறையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

எனினும் 64 ஆம் கட்டை மலையடி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக மூதூர் பிரதேச இந்துக் குருமார்களும், பொதுமக்களும் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட போது மூதூர் கொட்டியாராம விகாராதிபதி அவ்விடத்திற்கு வருகை தந்தபோது சற்று பதற்ற நிலையும் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

64 ஆம் கட்டை மலையடி பிள்ளையார் ஆலயம் பல வருடகாலமாக அருகிலுள்ள கிராம மக்களானாலும், திருகோணமலை - மட்டக்களப்பு வீதியூடாக பிரயாணம் செய்கின்ற பொதுமக்களாலும் வழிபாடு செய்யப்படுகின்ற ஆலயமென்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்விடத்தில் தொடர்ந்தும் இந்துக் குருமார்களும் ,பொதுமக்களும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியபோதும் குறித்த புத்தர் சிலை யாரால் வைக்கப்பட்டதென்று இதுவரைகண்டறியப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாணைகளை மூதூர் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுனாமி பேரலை இடரில் உயிரிழந்தோருக்கு அம்பாறை மாவட்ட உறவுகள் அஞ்சலி





(பாறுக் ஷிஹான்)

சுனாமி பேரலை இடரில் உயிரிழந்தோருக்கு அம்பாறை மாவட்ட உறவுகள் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

சுனாமி ஆழிப்பேரலையினால் உயிரிழந்தவர்களின் 1% ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று (26) அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை ,சாய்ந்தமருது ,பாண்டிருப்பு ,பெரியநீலாவணை, மாளிகைக்காடு ,காரைதீவு, நிந்தவூர், உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களினால் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன் படி கல்முனை பௌத்த விகாரை, பாண்டிருப்பு நினைவாலம் ,காரைதீவு சுனாமி நினைவாலயம் , கல்முனை கடற்கரை பள்ளிவாசலில் இடம்பெற்ற நிகழ்வில் பலரும் தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர்.

மேலும் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக இங்கு அமைக்கப்பட்ட பல தூபிகளில் மாலை அணிவிக்கப்பட்டு 9.25 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று இடம்பெற்று இன்றுடன் 1% வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்கா ஷரிப் நிர்வாக சபை இணைந்து ஏற்பாடு செய்த கத்தமுல் குர்ஆன் ஓதப்பட்டுஇவிஷேட துஆ பிராத்தனையும் கல்முனை கடற்கரை பள்ளிவாசலில் இடம்பெற்றிருந்தது.

நாட்டில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை ஆழிப் பேரலை (சுனாமி) அனர்த்ததினால் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பகுதி அதிகமான உயிரிழப்புக்களையும் இ சேதங்களை சந்தித்த பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.